بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 9

இதழ் 33 & 34

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1445 - ஸஃபர் 9 - 16 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - ஸஹீர் 15 - 22 ★ ஆகஸ்ட் 15 - 22

## அல்லாஹ்வின் கட்டளை

وَاَقِمِ الصَّلٰوةَ طَرَفَيِ النَّهَارِ وَزُلَفًا مِّنَ الَّيْلِ ؕ اِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ ؕ ذٰلِكَ ذِكْرٰى لِلذّٰكِرِيْنَ ﴿۱۱۵﴾

**பொருள்**

செவியேற்பவரே! நீர் பகலின் இரு கோடிகளிலும், இரவின் (ஒரு) பகுதியிலும் (சிறந்த முறையில்) தொழுகையினை நிலைநாட்டுவீராக! நிச்சயமாக நற்செயல்கள் தீய செயல்களை அகற்றி விடுகின்றன. (அல்லாஹ்வை) நினைவு கூர்பவர்களுக்கு இது ஓர் அறிவுரையாகும்.
(11:115)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**என்னை வானத்தின் மனிதராக ஒப்புக் கொள்ளுங்கள்; பின்னர் முஸ்லிம்களிடம் நிலவுகின்ற அனைத்து சண்டைகளும் சச்சரவுகளும் ஒரு நொடியில் தீர்ந்து விடும். என்னிடம் வாருங்கள்; எனது கூற்றை கேளுங்கள்; அப்போதுதான் உங்களுக்கு உண்மை தென்படும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

எனது அந்தஸ்து ஒரு சாதாரண மவ்லவியின் அந்தஸ்து கிடையாது. மாறாக, எனது அந்தஸ்து நபிமார்களின் அந்தஸ்தைப் போன்றதாகும். என்னை ஒரு வானத்தின் மனிதராக ஒப்புக் கொள்ளுங்கள்; பின்னர் அனைத்து சண்டைகளும், முஸ்லிம்களிடத்தில் நிலவும் அனைத்து சச்சரவுகளும் ஒரு நொடியில் தீர்ந்து விடும். இறைவன் புறமிருந்து அவர் அனுப்பப்பட்டு ஹகம் (நீதி நெறி தீர்ப்பவர்) ஆக வந்துள்ளார். திருக்குர்ஆனிற்கு அவர் என்ன பொருளை கொடுப்பாரோ அதுவே சரியானதாக இருக்கும்; அவர் எந்த ஹதீஸை ஸஹீஹ் என்று கூறுவாரோ அதுவே ஸஹீஹான ஹதீஸ் ஆக இருக்கும். இல்லையென்றால் ஷிஆ மற்றும் சன்னிகளின் சண்டைகளை இன்று வரை பாருங்கள். எங்கே முடிவுக்கு வருகின்றன! நான் கூறுகின்றேன்: இவர்கள் தங்களது (சுய) வழிமுறைகளை விட்டு விட்டு என்னுள் இருந்து பார்க்காத வரை இவர்களால் ஒருபோதும் உண்மையை சென்றடைய முடியாது. இந்த மக்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையென்றால், பின்னர் அவர்கள் இந்த அளவிற்காவது சிந்திக்க வேண்டும். அதாவது, இறுதியில் அனைவரும் மரணிக்க வேண்டும்; மரணித்த பிறகு அசுத்தமானவருக்கு ஒருபோதும் இரட்சிப்பு கிடைக்காது. பிறரை ஏசிபேசுவதை ஒரு கண்ணிய மிக்க நபர் கூட விரும்பமாட்டார்; அவ்வாறிருக்க, பரிசுத்தமான இறைவனின் சன்னிதானத்தில் (அது) எப்படி இறை வணக்கமாக இருக்க முடியும்? எனவே நான் கூறுகின்றேன்: என்னிடம் வாருங்கள்; எனது கூற்றை கேளுங்கள்; அப்போதுதான் உண்மை தென்படும். உண்மையான தவ்பா செய்து நம்பிக்கையாளராக ஆகிவிடுங்கள். பின்னர் நீங்கள் எந்த இமாமிற்காக காத்திருக்கின்றீர்களோ; நான் கூறுகின்றேன்; அது நானே ஆவேன். இதற்கான சான்றை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.இனி நீங்கள் பொருளற்ற விஷயங்களை விட்டு விடுங்கள்; மேலும் உயிருள்ள ஓர் இமாமைத் தேடுங்கள்; உங்களுக்கு வாழ்வின் உயிரோட்டம் கிடைக்கும். நீங்கள் இறைவனை தேடுகின்றீர்கள் என்றால் பின்னர் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டு தோன்றியுள்ள அவரை தேடுங்கள். எனவே நினைவிற் கொள்ளுங்கள்; இறைவன் நான் கூறுகின்ற இந்த வழிகளையே இறைவன் விரும்பியுள்ளான். இந்த நெருங்கிய வழியை அவனே வெளிப்படுத்தியுள்ளான். நானோ மீண்டும், மீண்டும் இதனையே கூறுகின்றேன்; எமது வழிமுறை இதுவாகும். அதாவது நீங்கள் புத்தம் புதிய முஸ்லிம் ஆகி விடுங்கள்; பின்னர் அல்லாஹ் அசல் உண்மைத்துவத்தை சுயமே உங்களுக்கு திறந்து கொடுத்து விடுவான்.
(மல்ஃபூஸாத், தொகுதி 2 பக்கம்25 காதியான் பதிப்பு)

**பொய் ஆன்மிகத்தை நாசமாக்கி விடக் கூடிய நோய் ஆகும். பொய் பேசக் கூடியவர் பிறரை ஏமாற்ற முயற்சி செய்யக் கூடியவர் ஆவார். இந்தக் குறையை அழிப்பது ஒவ்வொரு உண்மையான மற்றும் தூய முஸ்லிமின் மீது கடமையாகும்**
**எந்த சமுதாயத்திடம் பொய் காணப்படுகின்றதோ அந்த சமுதாயம் ஒருபோதும் வெற்றி பெற முடியாது**

فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ ﴿۳۱﴾
(22 :31)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

பின்னர் நாம் உங்களுக்கு இந்த இரண்டாவது அறிவுரையை வழங்குகின்றோம்; அதாவது நீங்கள் பொய்யிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் இது ஆன்மிகத்தை நாசமாக்கி விடக் கூடிய நோயாகும். மேலும், ஷிர்க் என்பது மாபெரும் பொய்யாகும். ஏனெனில், இறைவன் எந்த ஆற்றலை எவருக்கும் வழங்கவில்லையோ அவற்றைக் குறித்து இன்ன இன்ன விஷயங்கள் இருக்கின்றன என்று ஓர் இணை வைப்பாளர் கூறுகின்றார். இவ்வாறு பொய்யின் அசுத்தத்தை தனது வாயில் அவர் இடுகின்றார். உண்மை என்னவென்றால், நபிமார்களின் ஜமாஅத்துகளின் அடையாளங்களில் ஒரு மாபெரும் அடையாளம் உண்மை ஆகும். மேலும் இது எப்படிப்பட்ட அடையாளம் என்றால், அது தனது இருப்பில் மாபெரும் முக்கியத்துவம் கொண்டுள்ளது. ஆனால், வேதனை என்னவென்றால் உலகின் ஏராளமான மக்கள் உண்மையின் மகத்துவத்தை புரிவதில்லை. குறிப்பாக இக்காலத்தில் இந்த நோய் அதிகமாக காணப்படுகின்றது. ஏனெனில், இந்த காலம் நயவஞ்சகம் மற்றும் முகஸ்துததிக்கான காலம் ஆகும். மேலும் நாகரீகம் என்பதன் பொருள் இன்றைய நாட்களில் இவ்வாறு கருதப்படுகின்றது. அதாவது பேசக் கூடியவர் பிறருடைய கருத்துக்களை எந்த அளவிற்கு கருத்தில் கொள்ள வேண்டும் என்றால் அவருக்கு உண்மையை மறைக்க நேரிட்டால் அதற்கும் தயங்கக் கூடாது. ஆனால், காலத்தின் சூழலுக்கு மத்தியிலும்

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்....

## நபிமொழி

**ஒருவர் அன்பளிப்பு கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு பின்னர் அன்பளிப்பை முழுமை செய்வதற்கு முன்னரே மரணித்து விட்டால்**

(2598) ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் (ரலி) இவ்வாறு கூறிவந்தார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: பஹ்ரைன் நாட்டின் செல்வம் வந்தால் பின்னர் நான் உங்களுக்கு இவ்வாறு கொடுப்பேன். இப்படி மூன்று முறை கூறினார்கள்.

ஆக அந்த செல்வம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டபோது வந்தது. மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஓர் அறிவிப்பாளருக்கு கட்டளையிட்டார்கள். எனவே அவர் இவ்வாறு அறிவிப்பு செய்தார்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொறுப்பில் எவருக்காவது ஏதாவது வாக்குறுதியோ அல்லது கடனோ இருக்கும் என்றால் பின்னர் அவர் எம்மிடம் வரட்டும். ஆக நான் அன்னாரிடம் சென்றேன். மேலும் நான் கூறினேன்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் இவ்வாறு வாக்குறுதி செய்திருந்தார்கள். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எனக்கு மூன்று லப் (எனும் அளவை) நிறைத்து கொடுத்தார்கள்.

**வலப்புறம் இருப்பவரின் முக்கியத்துவம்**

(2602) ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஸஅத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பருகுவதற்கு ஒரு பானம் கொண்டு வரப்பட்டது. அன்னார் (ஸல்) பருகினார்கள். அன்னாரின் வலப்புறம் ஒரு சிறுவன் இருந்தான். மேலும் அன்னாரின் இடப்புறம் பெரிய வயதை கொண்ட நபர்கள் இருந்தனர். அப்போது இந்த பானத்தை இவர்களுக்கு கொடுப்பதற்கு நீ எனக்கு அனுமதி கொடு என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த சிறுவனிடம் கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களிடமிருந்து எனக்கு எந்த பகுதி எனக்கு கிடைத்ததோ நான் அதனை என்னைத் தவிர வேறு எவருக்கும் கொடுக்க மாட்டேன் என்று அந்த சிறுவன் கூறினான். அப்போது அன்னார் (ஸல்) அவரது கையில் குவளையை கொடுத்து விட்டார்கள்.
(புகாரி நூல், பாடம்: ஹிபா)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பத்ருல் ம்வ்இத் மற்றும் தூமத்துல் ஜந்தல் போருக்கான காரணிகள் மற்றும் சூழ்நிலைகள்**
**இரண்டு சம்பவங்களைப் பற்றிய விரிவான விளக்கங்கள் மற்றும்**
**உலகில் அமைதி நிலைபெறுவதற்காக துஆக்கள் செய்யும்படி அறிவுரை**

இந்த படையெடுப்புகளில் இருந்து நிரூபணமாவது என்னவென்றால், இது எதிரிகளின் தீங்கை தடுப்பதற்காகவும், அவர்களின் தீய நோக்கங்களை முடிவுக்கு கொண்டுவருவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டிருந்ததே தவிர மக்களை கொலை செய்வதற்காகவோ அல்லது தகாத பயன்களுக்காகவோ அல்லது அமைதியை சீர்குலைப்பதற்காகவோ இது மேற்கொள்ளப்படவில்லை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ருல் மவ்இத் போருக்காக புறப்படுவதற்கு கட்டளையிட்டபோது, அன்னார் (ஸல்) தமது உரையில் கூறினார்கள்: நாம் நிராகரிப்பாளர்களின் சவாலை ஏற்றுக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தில் புறப்படுவதாக வாக்குறுதி செய்திருந்தோம். எனவே இதனை நம்மால் தள்ளிப்போட முடியாது. எனக்கு தனியாக செல்ல நேரிட்டாலும் சரியே. நான் தனித்து செல்வேன்; மேலும் எதிரிக்கு எதிராக நான் தன்னந்தனியாக நிற்பேன். இவ்வாறு கூறியவுடன் மக்களின் அச்சம் மறைந்து விட்டது. மேலும் பெரும் உத்வேகத்துடனும், தூய்மையுடனும் அன்னாருடன் புறப்படுவதற்கு மக்கள் தயாராகி விட்டனர்

உஹது போருக்கு பிறகு பல்வேறு கோத்திரங்கள் முஸ்லிம்களை பலவீனமானவர்கள் என்று கருதிக் கொண்டு அவர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டங்கள் தீட்டி வந்தன. அவர்கள் மீது பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் ஆற்றல், துணிவு ஆகியவற்றின் தாக்கத்தை மிகவும் நுட்பத்துடனும், வெற்றியுடனும் மீண்டும் நிலை பெற செய்து விட்டார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 05 ஜுலை 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **வஃபா** மாதம் **05 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்று இரு படையெடுப்புகளை பற்றி எடுத்துக் கூறுவேன். முதல் படையெடுப்பின் பெயர் பத்ருல் முஅய்யித் ஆகும். இது ஹிஜ்ரி நான்காம் ஆண்டு நிகழ்ந்ததாகும். இந்த படையெடுப்பு பத்ருஸ் ஸானியா, பத்ருல் ஆகிரா மற்றும் பத்ருஸ் ஸுஃக்ரா என்ற பெயர்களாலும் அறியப்படுகின்றது. இந்தப் படையெடுப்பின் வரலாற்றை குறித்து பல்வேறு கூற்றுகள் காணக் கிடைக்கின்றன. இப்னு ஹிஷாம் மற்றும் இப்னு இஸ்ஹாக் ஆகியோரை பொருத்தவரை, பெருமானார் (ஸல்) அவர்கள் ஷுஅபான் மாதம் ஹிஜ்ரி நான்காம் ஆண்டில் பத்ரை நோக்கி புறப்பட்டார்கள். வாக்தியைப் பொருத்தவரை இந்தப் படையெடுப்பு ஹிஜ்ரி நான்காம் ஆண்டு துல்கஅதா உடைய பிறை தென்பட்ட பிறகு நிகழ்ந்ததாகும். மேலும் பத்ரில் துல்கஅதா ஒன்று முதல் எட்டாம் தேதி வரை சந்தை நடக்கும் என்று கூறப்பட்டுள்ளது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஷவ்வால் மாதத்தில் பத்ரை நோக்கி புறப்பட்டார்கள் என்று ஓர் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. அதாவது அன்னார் மதீனாவில் இருந்து புறப்பட்டு துல்கஅதா உடைய பிறை இரவில் பத்ர் மைதானத்தை வந்தடைந்தார்கள் என்று உள்ளது. எவ்வாறிருப்பினும், இந்த மூன்று கூற்றுகளின்படி இந்த படையெடுப்பு ஹிஜ்ரி நான்காம் ஆண்டில் நிகழ்ந்ததாகும். மாதத்தை பொருத்த வரை கருத்துவேறுபாடு காணப்படுகிறது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் இது தொடர்பாக எழுதும்போது, ஹிஜ்ரி நான்காம் ஆண்டில் ஷவ்வால் மாதத்தின் இறுதி வந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் 1500 ஸஹாபிகளைக் கொண்ட படையை அழைத்துக் கொண்டு மதீனாவில் இருந்து புறப்பட்டார்கள் என்று எழுதியுள்ளார்கள்.

இந்த படையெடுப்புக்கான காரணம் என்னவென்றால், அபூ ஸுஃப்யான் பின் ஹர்பு உஹது போரில் திரும்பிச் செல்லும்போது அடுத்த வருடம் நம்முடைய சந்திப்பு பத்ருஸ் ஸஃப்ராவில் இருக்கும் என்று உரத்த குரலில் கூறியிருந்தார். பத்ர், பத்ருஸ் ஸஃப்ரா என்றும் அழைக்கப்பட்டது. நாம் அங்கு போரிடலாம் என்று கூறியிருந்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், ஆகட்டும்! இன்ஷா அல்லாஹ்! என்று கூறுமாறு கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இன்ஷா அல்லாஹ்! என்று தாமே பதிலளித்தார்கள் என்று அல்லாமா பய்ஸாவி (ரலி) அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். பத்ர் என்பது மக்கா மற்றும் மதீனாவுக்கு இடையில் உள்ள ஒரு பிரபல்யமான கிணறு ஆகும். அது ஸஃப்ரா பள்ளத்தாக்கிற்கும் ஜார் எனுமிடத்திற்கும் இடையில் இருந்தது. பத்ர் மதீனாவின் தென்மேற்கு பகுதியில் 150 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இது அந்த இடத்தினுடைய லொகேஷன் ஆகும். அறியாமை காலத்தில் இந்த இடத்தில் ஒவ்வொரு வருடமும் துல்கஅதா ஒன்றாம் தேதி முதல் 8 வரை ஒரு மிகப் பெரும் சந்தை ஒன்று நடைபெற்று வந்தது. அபூ ஸுஃப்யானோ, ஆணவத்தில் இந்த அறிவிப்பை செய்து விட்டார்தான்; ஆனால் வாக்குறுதிக்கான நேரம் நெருங்கி வந்தபோது, போரை எதிர்கொள்வதை அவர் தவிர்க்க ஆரம்பித்தார். ஆனால், அவர் மிகப் பெரும் படையை அழைத்துக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டிருப்பதாக அவர் காட்டிக் கொண்டிருந்தார். அதன் மூலமாக இந்த செய்தி மதீனாவாசிகளை சென்றடைந்து விட வேண்டும் ; மேலும் அரேபியாவின் இதர பகுதிகளிலும் இது பரவி விட வேண்டும்; இதன் மூலமாக முஸ்லிம்களை அச்சுறுத்த வேண்டும் என்று அவர் நினைத்தார்.

அதே நாட்களில் பனூ அஷ்ஜஃ கோத்திரத்தைச் சேர்ந்த நுஅய்ம் பின் மஸ்வூது என்ற ஒருவர் மக்காவுக்கு சென்றிருந்தார். அவர் பிற்காலத்தில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார். அவர் அங்கு அபூ ஸுஃப்யானை சந்தித்தார். நான் மக்காவுக்கு ஏன் வந்தேன்? என்றால், முஸ்லிம்களுடைய ஆயத்தங்களை குறித்து உங்களுக்கு தெரிவிக்கவே வந்துள்ளேன்; அவர்களிடத்தில் அளவற்ற ஆயுதங்களும், ஒட்டகங்களும், குதிரைகளும் இருக்கின்றன; அவர்கள் தம் நட்புக் கோத்திரங்களையும் உடன் சேர்த்துக் கொண்டார்கள்; அவர்கள் மிகவும் ஆக்ரோஷமாக தாக்குதல் தொடுக்க இருக்கின்றார்கள்; நீங்கள்தானே போருக்கு அழைத்தீர்கள்; இப்பொழுது அந்த வாக்குறுதியின் நேரம் நெருங்கி விட்டது; ஆகவே நீங்கள் போர்க் களத்தில் உங்கள் திறமையை காட்டுங்கள் என்று கூறினார்.

அந்த பேச்சை தவிர்த்து விட்டு அவரிடம், நுஅய்மே! எங்கள் பகுதியில் பஞ்ச காலம் வந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள்; நீண்ட காலமாக மழை பொழியவில்லை; நீர் குளங்கள் காய்ந்து போய் இருக்கின்றன; மேய்ச்சல் நிலங்களில் கால்நடைகளுக்கும் சவாரி விலங்குகளுக்கும் ஒரு புல் கூட இல்லை; எல்லாப்புறமும் வாழ்வாதாரத்தின் நெருக்கடி இருக்கின்றது; ஆகவே இந்த நாட்களை கடந்து விடுவதில்தான் புத்திசாலித்தனம் இருக்கின்றது; அதற்காக நீங்கள் மிக முக்கிய பங்களிப்பை வழங்க முடியும் என்று அபூ ஸுஃப்யான் கூறினார்.

அதாவது அவரிடம் உதவி கேட்டார். நீங்கள் மதீனாவிற்கு சென்று (அம்) மக்களிடத்தில் எங்களுடைய திட்டத்தைப்

பற்றியும், ஆள்பலத்தைப் பற்றியும் மிகைப்படுத்தி தகவல் கூறுங்கள்; அதை மிகவும் பிரபல்யமடைய செய்து விடுங்கள்; அதன் மூலமாக நம்முடைய சொல்லும் நிலைத்திருக்கட்டும்; முஸ்லிம்கள் சுயமே பயந்துபோய் பத்ரை நோக்கி வராமல் இருக்கட்டும் என்று கூறினார். அதற்கு பதிலாக எனக்கு என்ன கிடைக்கும்? என்று நுஅய்ம் கேட்டார். 20 ஒட்டகங்களை வழங்குவதாக அபூ ஸுஃப்யான் கூறினார். அதை நுஅய்ம் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார். இந்த பரிசை ஸுஹைல் பின் அம்ர் -யிடம் ஒப்படைத்து விட்டால் பிறகு நான் இந்த வேலைக்காக செல்வேன் என்று கூறினார். ஸுஹைல் அவருடைய நெருங்கிய நண்பராக இருந்தார்.


அவர் உறுதி கொடுத்ததன் அடிப்படையில் நுஅய்ம் புறப்படுவதற்கு ஆயத்தமானார். அந்தத் திட்டத்தை விரைவிலும் விரைவாக செயல்படுத்தும் வண்ணம் அவருக்கு வேகமாக செல்லக் கூடிய ஒட்டகம் கொடுக்கப்பட்டது. நுஅய்ம் பயணத்திற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு மதீனாவை நோக்கி புறப்பட்டார். அவர் உம்ரா செய்து விட்டு தலையை மழித்திருந்தார். மதீனாவை நோக்கி வேக வேகமாக சென்று கொண்டிருந்தார். இஸ்லாமியப் படை மதீனாவில் இருந்து புறப்பட்டு விடக் கூடாது என்று அவர் உடனடியாக மதீனாவை சென்றடைய விரும்பினார். அவர் மதீனாவை சென்றடைந்தபோது, முஸ்லிம்கள் மிகவும் உத்வேகத்துடன் ஜிஹாதுடைய ஆயத்தங்களில் மூழ்கி இருந்தார்கள். நுஅய்மே! எங்கிருந்து வருகிறீர்? என்று முஸ்லிம்கள் அவரிடம் கேட்டனர். அதற்கு, அவர் நான் உம்ரா செய்து விட்டு மக்காவிலிருந்து வருகிறேன் என்று கூறினார். அப்படியென்றால், உங்களுக்கு அபூ ஸுஃப்யான் பற்றி தெரிந்திருக்குமே ; அவருடைய போர் ஆயத்தங்கள் எந்த அளவுக்கு உள்ளன என்று கேட்டார்கள். அதற்கு, அவர் அபூ ஸுஃப்யான் பல படைகளை ஒன்று திரட்டியுள்ளார்; முழு அரேபியாவையும் தம்முடன் சேர்த்துக் கொண்டு விட்டார் என்று மிகவும் மிகைப்படுத்தி கூறினார். அவர் எந்த அளவு பெரிய படையுடன் வருகின்றார் என்றால், அதை எதிர்கொள்வது உங்கள் சக்திக்கு அப்பாற்பட்டது ஆகும்; நான் கூறுவதை கேளுங்கள்; நீங்கள் மதீனாவிலேயே இருந்து விடுங்கள்; போருக்காக மதீனாவை விட்டு வெளியே செல்லாதீர்கள்; அவர் எந்த அளவு பெரிய படையுடன் தாக்குதல் தொடுக்க உள்ளார் என்றால், எவர் தப்பித்து ஓடுவாரோ அவர் மட்டுமே அதிலிருந்து தப்பிக்க முடியும். உங்கள் தலைவர்கள் கொல்லப்பட்டு விடுவார்கள். முஹம்மது (ஸல்) அவர்களால் கூட காயங்களை பொறுக்க இயலாது; நீங்கள் மதீனாவில் இருந்து வெளியேறி மரணத்தின் வாய்க்குள் செல்ல விரும்புகிறீர்களா? அந்தோ பரிதாபம்; நீங்கள் உங்களுக்காக மிக மோசமான முடிவை எடுத்துள்ளீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களுள் எவராவது ஒருவர் உயிர் தப்புவாரா? என்பது கூட எனக்கு தெரியவில்லை என்று மிகவும் அவநம்பிக்கையான பேச்சுக்களை பேசினார். அதன் மூலமாக முஸ்லிம்கள் பயந்து விட வேண்டும் என்று அவர் நினைத்தார். அவர் தம் பேச்சுக்களை எந்த அளவு மிகைப்படுத்தி கூறினார் என்றால், சிலசமயம் அபூ ஸுஃப்யானால் ஆயத்தம் செய்யப்பட்ட படைவீரர்களின் எண்ணிக்கை பற்றி கூறினார்; சிலசமயம் அவர்களின் ஆயுத கிடங்குகளைப் பற்றி கூறினார்.சில சமயம் குறைஷிய தலைவர்களின் உத்வேக உதாரணங்களை கூறினார்; சிலசமயம் அவர்களுடைய அச்சுறுத்தும் போர் நடவடிக்கைகளை புகழ்ந்து பேசினார். அவர் எந்த அளவு திறமையுடன் தம் திட்டத்தை செயல்படுத்தினார் என்றால் சில நாட்களிலேயே மதீனாவின் சூழல் அச்சத்தாலும், அவநம்பிக்கையாலும் நிரம்பி விட்டது. நுஅய்ம் பின் மஸ்வூத் உடைய தந்திரம் பலித்து விட்டது. பலவீனமான ஈமானைக் கொண்ட முஸ்லிம்கள் அவருடைய வதந்திகளால் உண்மையிலேயே தாக்கத்திற்குள்ளாகி விட்டனர். எந்த அளவுக்கு என்றால், எந்த நபர் பேசினாலும் அவர் நுஅய்ம் பின் மஸ்வூத் உடைய கூற்றை உண்மைப்படுத்தி வந்தார். ஒவ்வொரு சபையிலும் அபூ ஸுஃப்யான் அவர்களிலும் ஆயுதமேந்திய பெரும் படையை குறித்தும், அபாயகரமான ஆயத்தங்களைக் குறித்தும் பேச்சு வந்தது. முஸ்லிம்களின் இந்நிலையைக் கண்டு யூதர்களும், நயவஞ்சகர்களும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் இப்போது இவ்வுலகத்தை விட்டு அழிக்கப்பட்டு விடுவார்கள் என்று அவர்கள் ஒருவர் மற்றவருக்கு நற்செய்தியை கூறிக் கொண்டிருந்தார்கள். மதீனாவில் இந்த சூழலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தம் மார்க்கத்தை வெற்றி பெறச் செய்வான்; தம் நபி (ஸல்) அவர்களுக்கு கண்ணியத்தை வழங்குவான். நாம் சமுதாயத்துடன் வாக்குறுதி செய்து இருக்கிறோம்; நாம் அதற்கு எதிராக செயல்படுவதை விரும்புவதில்லை. நாம் அங்கு மைதானத்திற்கு செல்லவில்லை என்றால் காஃபிர்கள் அதை கோழைத்தனமாக கருதுவார்கள். தாங்கள் வாக்குறுதிக்கு ஏற்ப அழைத்துச் செல்லுங்கள். இறைவன் மீது ஆணையாக! அதில் நிச்சயமாக நன்மை இருக்கும் என்று கூறினார்கள். இந்த உணர்வை கண்ட பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

وَالَّذِى نَفْسِى بِيَدِهٖ لَاَخْرُجَنَّ

وَإِنْ لَّمْ يَخْرُجْ مَعِىَ أَحَدٌ

என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அதாவது, எந்த இறைவனின் கையில் என் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நான் நிச்சயமாக புறப்படுவேன்; என்னுடன் எந்தவொரு நபரும் புறப்படவில்லை என்றாலும் சரியே!

முஸ்லிம்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் மன உறுதி, திடம் மற்றும் துணிவு ஆகியவற்றை கண்டபோது அவர்களின் அச்சமும், அவநம்பிக்கையும் சென்று விட்டது. அவர்கள் உத்வேகத்துடன் ஆயத்தங்களை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.




ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) ஸாஹிப் அவர்களும், பத்ருல் முஅய்யித் படையெடுப்பை பற்றி எழுதியுள்ளார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: அபூ ஸுஃப்யான் பின் ஹர்புக்கு வெற்றி கிடைத்திருந்தபோதிலும், இவ்வளவு பெரிய படை உடன் இருந்தபோதிலும் அவருடைய உள்ளம் அஞ்சிக் கொண்டிருந்தது. இஸ்லாத்தின் அழிவுக்காக முயற்சி செய்து கொண்டிருந்தபோதிலும், மிகப் பெரிய படைக்கான ஏற்பாடு ஆகாத வரை முஸ்லிம்களை எதிர்கொள்ள வேண்டாம் என்று அவர் நினைத்துக் கொண்டிருந்தார். எந்த அளவுக்கென்றால், அவர் மக்காவில் இருக்கும் போது நுஅய்ம் எனும் பெயருடைய எந்த ஒரு கோத்திரத்தையும் சாராத ஒருவரை மதீனாவை நோக்கி அனுப்பி வைத்தார். எப்படியாவது முஸ்லிம்களை அச்சுறுத்தி, பொய்யான விஷயங்களை பேசி போருக்காக புறப்பட விடாமல் செய்ய வேண்டும் என்று அவருக்கு வலியுறுத்தி கூறியிருந்தார். ஆகவே இந்த நபர் மதீனாவுக்கு வந்தார். குறைஷியர்களின் ஆயத்தங்களை குறித்தும், வலிமையை குறித்தும் அவர்களின் உத்வேகங்களை குறித்தும் பொய்யான கதைகளை எடுத்துக் கூறி மதீனாவில் ஒரு நிம்மதியற்ற நிலையை உருவாக்கி விட்டார். எந்த அளவுக்கு என்றால், சில பலவீனமான இயல்புடைய மக்கள் இந்த போர் நடவடிக்கையில் இணைவதற்கு அச்சப்பட ஆரம்பித்தனர். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் புறப்படுமாறு கவனமூட்டிய போது, அன்னார் தம் சொற்பொழிவில் நாம் காஃபிர்களுடைய சவாலை ஒப்புக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தில் புறப்படுவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். ஆகவே நாம் இதிலிருந்து பின்வாங்க முடியாது. நான் தனியாக செல்ல நேர்ந்தாலும் நான் செல்வேன். எதிரிக்கு முன்னால் தனியாக நிற்க வேண்டியது வந்தாலும் நான் நிற்பேன் என்று கூறினார்கள். ஆகவே மக்களுடைய அச்சம் விலகியது. அவர்கள் மிகவும் உத்வேகத்துடனும், களங்கமற்ற தன்மையுடனும் அன்னாருடன் புறப்படுவதற்கு ஆயத்தமானார்கள்.

மீண்டும் ஆயத்தங்களை ஆரம்பித்தார்கள்.

எவ்வாறிருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அபூ ஸுஃப்யானுடைய படையின் ஆயத்தங்களை குறித்து செய்தி கிடைத்தபோது, அன்னார் (ஸல்) அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ் பின் உபைய் பின் ஸலூல் என்ற களங்கமற்ற, தியாக உணர்வு மிக்க, உறுதியான ஒரு முஸ்லிமை மதீனாவில் தமக்கு பின்னால் அமீராக நியமித்தார்கள். இவர் நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபை உடைய மகன் ஆவார். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை நியமித்ததாக இன்னோர் அறிவிப்பில் காணப்படுகிறது. எவ்வாறிருப்பினும், பல்வேறு பணிகளுக்காக இருவரையும் கண்காணிப்பாளராக ஆக்கி இருக்கவும் வாய்ப்புள்ளது. அல்லது அறிவிப்பாளருக்கு அப்துல்லாஹ் என்ற பெயரினால் குழப்பம் ஏற்பட்டு இருக்கலாம். ஒருவர் அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ் என்று கூறியிருக்கலாம். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தம் கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். 1500 ஸஹாபிகளுடன் பத்ரை நோக்கி புறப்பட்டார்கள். அந்தப் படையில் பத்து பேர் குதிரையில் பயணிப்பவர்களாக

இருந்தார்கள். ஒரு குதிரை பெருமானார் (ஸல்) அவர்களுக்காக இருந்தது. அதைத் தவிர ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி), ஹஸ்ரத் ஸயீது பின் ஸைத் (ரலி), ஹஸ்ரத் மிக்தாது பின் அஸ்வது (ரலி), ஹஸ்ரத் கப்பாப் பின் முன்ஸிர் (ரலி), ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) ஆகியோரிடம் குதிரைகள் இருந்தன. முஸ்லிம்கள் தம் வியாபார பொருட்களுடன் பத்ர் ஐ நோக்கி புறப்பட்டார்கள். துல்கஅதா உடைய பிறை வெளிப்பட்டபோது, முஸ்லிம்கள் பத்ர் மைதானத்தை சென்றடைந்திருந்தார்கள். முஸ்லிம்களோ அபூ ஸுஃப்யானுடன் போரிடுவதற்காகவும், அவரை எதிர்கொள்வதற்காகவும் சென்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் வியாபாரப் பொருட்களை உடன் எடுத்துச் சென்றது அவர்களின் திடம், துணிவு, நம்பிக்கை ஆகியவற்றை பறைசாற்றுகின்றது. ஒன்று, அபூ ஸுஃப்யான் போருக்கு வரவே மாட்டார்;அப்படி வந்துவிட்டாலும் மிக மோசமாக தோல்வி அடைந்து ஓடிவிடுவார். அந்த நாட்களில் அங்கு சந்தையும் நடந்து வந்தது; முஸ்லிம்கள் வியாபாரம் செய்து பயனடையலாம் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் வழிகாட்டியிருக்கலாம் அல்லது சுட்டிக்காட்டியிருக்கலாம்; வாய்ப்புள்ளது. அதன் அடிப்படையில் அவர்கள் வியாபார பொருட்களை எடுத்துக் கொண்டு சென்றிருக்கலாம். பிறகு உண்மையிலேயே அவ்வாறுதான் நிகழ்ந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் வாக்குறுதிக்கேற்ப அபூ ஸுஃப்யான் அவர்களுக்காக பத்ர் மைதானத்தில் காத்திருந்தார்கள். அப்போது மஃக்-ஷீ பின் அம்ர் ஸம்ரீ என்பவர் அன்ஸாரிடம் வந்தார். இவர் பனூ ஸம்ராவுடைய தலைவராக இருந்தார். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் இந்த கோத்திரத்தாருடன் முஸ்லிம்களுக்கு ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ ஸம்ரா மீது தாக்குதல் தொடுக்க மாட்டார்கள் என்றும் அதேபோன்று பனூ ஸம்ராவும் அன்னாருக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபட மாட்டார்கள்; எந்தவொரு நடவடிக்கையிலும் பங்கு பெற மாட்டார்கள்; அன்னாருடைய எந்தவோர் எதிரிக்கும் உதவி செய்ய மாட்டார்கள் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அந்த நபர் பெருமானார் (ஸல்) அவர்களிடம், முஹம்மது (ஸல்) அவர்களே! தாங்கள் குஷைியர்களுடன் போரிடவா இந்த நீரூற்றுக்கு வந்துள்ளீர்கள் என்று கேட்டார்.

அவருடைய பேச்சைக் கொண்டு அவர் குறைஷியர்களின் பக்கம் சாய்ந்திருக்கிறார் என்பதை அன்னார் அனுமானித்துக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த நபரிடம், பனூ ஸம்ராவுடைய சகோதரரே! அவ்வாறுதான் (நாங்கள் வந்துள்ளோம்). நீங்கள் விரும்பினால் எங்களுக்கும் உங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் சமாதான உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டு வந்து நாங்கள் உங்களுடன் போர் செய்கிறோம்; எந்த அளவுக்கென்றால், இறைவன் எங்களுக்கும், உங்களுக்கும் இடையில் தீர்ப்பு வழங்கட்டும் என்று கூறினார்கள். அதற்கு, முஹம்மது (ஸல்) அவர்களே! இறைவன் மீது ஆணையாக! தங்களுடன் போர் செய்வதற்கு எங்களுக்கு எந்த அவசியமும் இல்லை என்று மஃக்ஷீ, கூறினார்.

அந்த சந்திப்பில் பெருமானார் (ஸல்) அவர்கள் நுட்பத்துடனும், துணிவுடனும் அந்த கோத்திரத்தார்கள் மீது ஒரு விஷயத்தைத் தெளிவாக்கி விட்டார்கள். அது என்னவென்றால், நமக்கு இடையில் போர் நிறுத்தத்திற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் அது ஏதேனும் கோழைத்தனத்தின் காரணமாகவோ அல்லது பலவீனத்தின் காரணமாகவோ கிடையாது என்பதாகும்.

உஹது போருக்கு பிறகு பல்வேறு கோத்திரங்கள் முஸ்லிம்களை பலவீனமானவர்கள் என்று கருதிக் கொண்டு அவர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டங்கள் தீட்டி வந்தன. அவர்கள் மீது பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் ஆற்றல், துணிவு ஆகியவற்றின் தாக்கத்தை மிகவும் நுட்பத்துடனும், வெற்றியுடனும் மீண்டும் நிலை பெற செய்து விட்டார்கள்.

முஸ்லிம்கள் வாக்குறுதிக்கு ஏற்ப பத்ர் மைதானத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இன்னொரு பக்கமோ, நாம் நுஅய்ம் பின் மஸ்வூதை அனுப்பியுள்ளோம்; முஸ்லிம்கள் பயணத்திற்காக புறப்படுவதற்கு முன்பே அவர் அவர்களை துணிவு இழக்கச் செய்து விடுவார்; அவர் மிகவும் முயற்சி செய்து வருகிறார்; ஆயினும், நாம் ஓரிரு இரவுகளுக்காக புறப்பட்டுச் செல்வோம்; பிறகு நாம் திரும்பி வந்துவிடுவோம். முஹம்மது (ஸல்) அவர்கள் பயணத்திற்காக புறப்படவில்லை என்றால், நாங்களோ சென்றிருந்தோம் ;ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களும், அவர்களுடைய தோழர்களும் வரவில்லை என்று நாம் மிக எளிதாக கூறிவிடுவோம். இவ்வாறு நமக்கு வெற்றி கிடைத்து விடும். ஆனால், அவர்கள் பயணத்திற்காக புறப்பட்டு விட்டார்கள் என்றால், இவ்வருடம் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. செழிப்பான வருடத்தில் புறப்படுவதுதான் நமக்கு சிறந்ததாகும் என்று நாம் காட்டிக் கொள்வோம். இவ்வாறு கூறிவிட்டு வழியில் இருந்தே நாம் திரும்பி வந்து விடலாம் என்று அபூ ஸுஃப்யான் குறைஷிய தலைவர்களிடம் கூறினார்.

இது நல்ல ஆலோசனையாகும் என்று குறைஷியர்கள் கூறினார்கள். ஆகவே காஃபிர்களுடைய படை அபூ ஸுஃப்யானின் தலைமையில் மக்காவிலிருந்து புறப்பட்டது. அவர்களின் எண்ணிக்கை 2000 ஆக இருந்தது. அவர்களிடத்தில் 50 குதிரைகள் இருந்தன. இந்தப் படை மர்ருஸ் ஸஹ்ரான் எனும் பள்ளத்தாக்கில் முஜன்னா எனும் பெயருடைய நீரூற்றுக்கு அருகில் முகாமிட்டது. மர்ருஸ் ஸஹ்ரான் மக்காவில் இருந்து 22 கி.மீ வடக்கில் அமைந்துள்ளது. பஞ்சத்தின் காரணமாக குறைஷியர்களின் பொருளாதார நிலை உண்மையிலேயே மோசமாக இருந்தது. அவர்களின் வருமானத்திற்கான வழிவகைகளும் குறைந்து போயிருந்தன. ஆகவே நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் நிர்ணயிக்கப்பட்ட இடத்தை அடைவதற்கு அவர்களுக்கு துணிவு இருக்கவில்லை. அதாவது பத்ரை சென்றடைய தைரியம் இருக்கவில்லை. ஆனால் தலைகுனிய வேண்டியது வருமே என்ற அச்சத்தின் காரணமாக அந்த படை புறப்பட்டது. அவர்களுடைய படைத் தளபதி மக்காவிலிருந்தே ஆர்வமற்றவராகவும், அவநம்பிக்கையடைந்தவராகவும் இருந்தார். முஸ்லிம்களுடன் நடக்கப் போகின்ற போரின் விளைவைப் பற்றி அவர் மீண்டும், மீண்டும் யோசித்துக் கொண்டிருந்தார். அந்த பீதியின் காரணமாக நடுங்கிக் கொண்டிருந்தார். மர்ருஸ் ஸஹ்ரான் வந்தடைந்த பிறகு அவருடைய துணிவு முற்றிலும் போய்விட்டது. திரும்பிச் செல்வதற்கு சாக்குபோக்குகளை தேட ஆரம்பித்தார். இறுதியில் தம் படையினரிடம் திரும்பிச் செல்லுமாறு அறிவிப்பு செய்தவாறு அதற்கான காரணங்களை விளக்குவதற்காக நின்று கொண்டு, குறைஷிய மக்களே வளமிக்க பசுமையான வருடம்தான் போருக்கு உங்களுக்கு சிறந்ததாகும். அதனால் கால்நடைகளையும் நீங்கள் மேய விடலாம்; நீங்களும் பால் அருந்திக் கொள்ளலாம். இப்போது பஞ்ச காலமாக இருக்கிறது. ஆகவே நான் திரும்பிச் செல்கிறேன்; நீங்களும் திரும்பிச் செல்லுங்கள் என்று கூறினார். அபூ ஸுஃப்யானின் இந்த தீர்ப்பை எதிர்ப்பதற்கு பதிலாக அனைவரும் திரும்பிச் செல்ல முடிவெடுத்தனர். எந்த ஒரு நபரும் பயணத்தை தொடரலாம் என்றோ முஸ்லிம்களுடன் போரிடலாம் என்றோ ஆலோசனை கூறவில்லை. முழு படையிலும் முஸ்லிம்களின் திகில் பரவி இருந்தது என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் வாக்குறுதிக்கு ஏற்ப அபூ ஸுஃப்யானிற்காக பத்ரில் 8 நாட்கள் வரை காத்திருந்து தங்கி இருந்த பிறகு மதீனா திரும்பி வந்தார்கள். அன்னார் (ஸல்) இந்த படையெடுப்புக்காக மொத்தம் 16 இரவுகள் மதீனாவை விட்டு வெளியே இருந்தார்கள். முன்னால் வருவதற்கு எதிராளிக்கு தைரியம் இருக்கவில்லை. எதிரிக்கு பெருத்த அவமானமாக போய்விட்டது. முஸ்லிம்களின் துணிவு(ம்) மேலோங்கியது. அந்தப் பகுதியைச் சார்ந்த சில உள்ளூர் காஃபிர்கள் மக்கத்து குறைஷியர்களின் பக்கம் சாய்ந்திருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் வீரத்துடன் அவர்கள் மீது தம் மன உறுதியை தெளிவாக்கி விட்டார்கள். அவர்களும் அஞ்சி ஒடுங்கி விட்டார்கள். பத்ரைச் சார்ந்த சில வியாபாரிகள் வியாபாரத்தை முடித்துக் கொண்டு மக்காவுக்கு சென்றிருந்தார்கள். அவர்கள் அபூ ஸுஃப்யானிடம் முஸ்லிம்களுடைய உறுதியான நிலைபாட்டைக் குறித்து தகவல் கூறினார்கள். அபூ ஸுஃப்யானும் அவருடைய தோழர்களும் தம் கோழைத்தனம் மற்றும் வாக்கு மீறியது ஆகியவற்றின் காரணமாக மிகவும் அவமானப்பட்டு போய் இருந்தார்கள். இந்த படையெடுப்பில் வெளிப்படையான முறையில் போர் நடைபெறவில்லைதான். ஆயினும், முஸ்லிம்களுடைய கண்ணியம், நம்பிக்கை ஆகியவை மீண்டும் நிலைபெற்றது. எதிரி மீது அச்சத்தை ஏற்படுத்துவதில் நன்கு முன்னேற்றம் கிடைத்தது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இது தொடர்பாக எழுதுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் 1500 ஸஹாபிகளுடன் மதீனாவில் இருந்து புறப்பட்டார்கள். இன்னொரு பக்கம் அபூ ஸுஃப்யான் தமது 2000 படை வீரர்களுடன் மக்காவில் இருந்து புறப்பட்டார். ஆனால் இறைவனுடைய திட்டம் எவ்வாறு இருந்தது என்றால், முஸ்லிம்கள் தம் வாக்குறுதிக்கேற்ப பத்ர் ஐ வந்தடைந்து விட்டார்கள். ஆனால்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

குறைஷிய படை கொஞ்ச தூரம் வரை வந்து விட்டு பிறகு மக்காவுக்கு திரும்பிச் சென்று விட்டது. அதற்கான காரணம் என்னவென்றால், அபூ ஸுஃப்யானுக்கு நுஅய்ம் உடைய தோல்வியைப் பற்றி தெரிய வந்தபோது அவர் உள்ளத்தால் பயந்து போனார். இந்த வருடம் பஞ்சம் அதிகமாக உள்ளது; மக்களுக்கு நெருக்கடி உள்ளது; எனவே இந்நேரத்தில் போரிடுவது சரியானதல்ல ; செழிப்பு இருக்கும்போது அதிக ஆயத்தத்துடன் மதீனா மீது தாக்குதல் தொடுக்கலாம் என்று தம் படையினருக்கு நம்பிக்கையூட்டி போகும் வழியில் இருந்து திரும்ப அழைத்துச் சென்று விட்டார். இஸ்லாமியப் படை 8 நாள் வரை பத்ர் -இல் தங்கி இருந்தது. அங்கு ஒவ்வொரு வருடமும் பல சஹாபிகள் அந்த சந்தையில் வியாபாரம் செய்து பெரும் லாபத்தை சம்பாதித்தார்கள். எந்த அளவுக்கு என்றால், அவர்கள் இந்த எட்டு நாள் வியாபாரத்தில் தம்முடைய முதலீட்டை இரு மடங்காக ஆக்கிக் கொண்டார்கள். சந்தை முடிந்தபோது, குறைஷிய படை வராததை கண்டபோது பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர்-இல் இருந்து கிளம்பி மதீனாவுக்கு திரும்பி வந்து விட்டார்கள். குறைஷியர்கள் மக்காவுக்கு திரும்பிச் சென்று மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான ஆயத்தங்களை ஆரம்பித்தார்கள்.

இப்பொழுது குறைஷியர்கள் திரும்பிச் சென்ற பிறகு தம்முடைய அவமானத்தை அகற்றுவதற்காகவும் முஸ்லிம்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவதற்காகவும் மீண்டும் போருக்கான ஆயத்தங்களை துவக்கினார்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த படையெடுப்பின் முடிவு இவ்வாறானதாக இருந்தது. இரண்டாவது படையெடுப்பு தூமத்துல் ஜந்தல் என்பதாகும். இது ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதத்தில் நிகழ்ந்தது. தூமத்துல் ஜந்தல் என்பது மதீனாவில் இருந்து ஏறக்குறைய 450 கி.மீ தொலைவில் இருக்கும் இடமாகும். பழங்காலத்தில் ஏறக்குறைய 15 அல்லது 17 நாட்கள் கொண்ட பயணமாக இருந்தது இது. மதீனாவுக்கு வடக்கு திசையில் சிரியாவின் எல்லைப் பகுதிக்கு அருகில் இருக்கும் இடமாகும். இங்கு பனூ குஸாஆ கோத்திரத்தின் கிளைக் கோத்திரத்திமான பனூ கல்பைச் சார்ந்த மக்கள் குடியிருந்தார்கள். இந்தப் பகுதியில் பல வியாபார சந்தைகள் நடந்து வந்தன. அவை பனூ கல்புடைய கண்காணிப்பின் கீழ் நடந்து வந்தன. தூமத்துல் ஜந்தல் என்ற பெயருக்கான காரணத்தை பற்றி கூறப்படும்போது, அங்கு ஒரு கோட்டை இருந்தது. அது ஒருவகை கற்களால் கட்டப்பட்டிருந்தது என்று கூறப்படுகின்றது. அதேபோன்று தூமா என்ற சொல் தொடர்ச்சியான வெள்ளப்பெருக்கினால் உருண்டை வடிவ கற்கள் பெருமளவில் ஒன்றுசேர்வதற்கும் கூறப்படுகிறது. அதேபோன்று இந்த இடத்தை தூமா என்று அழைப்பதற்கு இன்னொரு காரணமும் உள்ளது. அது என்னவென்றால், ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் இரு மகன்கள், அதாவது தூமா அல்லது தூமன் ஆகியோரை இது சுட்டிக்காட்டுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும், இவை இந்தப் பெயருக்கான காரணங்களாகும். இந்தப் படையெடுப்பின் காலத்தை குறித்தும் படையினரின் எண்ணிக்கையை குறித்தும் எழுதப்பட்டுள்ளதாவது; அனைத்து வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்றை எழுதக்கூடியவர்கள் இந்த படையெடுப்பு ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டில் ரபீவுல் அவ்வல் மாதம் 25ம் தேதி நிகழ்ந்ததாக எழுதி இருக்கிறார்கள். இந்த படையெடுப்புக்கான காரணம் என்னவென்றால், அப்பொழுது வரை எதிரிகளுடன் நடைபெற்ற அனைத்து போர் நடவடிக்கைகளும் மதீனா மற்றும் ஹிஜாஸ் பகுதியை சுற்றி மட்டுமே இருந்தது. மதீனாவில் இருந்து ஏறக்குறைய 15 நாட்கள் பயண தொலைவில் ரோமாபுரி ஆட்சி அமையப்பெற்ற சிரியா பகுதியின் எல்லைக்கு அருகில் இந்த போர் நடவடிக்கை இருந்தது. இதற்கான பின்னணி என்னவென்றால், முஸ்லிம்களிடமிருந்து தொடர்ச்சியான தோல்வி மற்றும் முஸ்லிம்களின் அதிகரிக்கும் தாக்கம் ஆகியவற்றைக் கண்டு மார்க்கத்தின் எதிரிகள் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களை வேரோடு அழிப்பதற்கான வாய்ப்பைத் தேடிக் கொண்டிருந்தார்கள். இதை செயல்படுத்துவதற்காக மதீனாவில் இருந்து வடக்கு திசையில் சிரியாவின் எல்லைப் பகுதியில் வெகு தூரத்தில் இருந்த தூமத்துல் ஜந்தலை சுற்றியிருந்த கோத்திரங்கள் இஸ்லாமிய ஆட்சிக்கு சவால் விடுக்கும் வண்ணம் ஒரு பெரிய படையை ஒன்று திரட்ட ஆரம்பித்தன. நாங்கள் தாக்குதல் தொடுப்போம் என்று அவர்கள் சவால் விடுத்தனர். இம்மக்கள் வியாபார குழுக்களை கொள்ளை அடித்து வந்தனர். அவர்கள் சவால் விடுத்தது மட்டுமின்றி குழப்பங்களையும் செய்து வந்தனர். (வியாபார) குழுக்களை கொள்ளையடித்து வந்தனர். ஏதாவது முஸ்லிம் அவர்களின் கைக்கு கிடைத்ததால் அவருக்கு துன்பம் கொடுத்து வந்தனர். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தூமத்துல் ஜந்தலுடைய இக்கோத்திரங்களின் அனைத்து நடவடிக்கைகளைக் குறித்தும் தகவல் தெரிவிக்கப்பட்டபோது, தூமத்துல் ஜந்தலைச் சார்ந்த இக்கோத்திரங்கள் ஏதேனும் பெரிய படையை ஒன்று திரட்டி மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு முன்பாக அந்தப் பகுதியை அடைந்து அவர்கள் மதீனாவின் மீது படையெடுப்பு செய்வதை விட்டு விலகும் வகையில் அவர்களை சிதறடித்து விடவேண்டும் என்றும், வியாபாரக் குழுக்கள் பாதுகாப்புடன் சிரியா சென்றடைய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதற்கான ஆயத்தங்களை குறித்து எழுதப்படும் போது, பெருமானார் (ஸல்) அவர்கள் புறப்படுமாறு மக்களுக்கு கட்டளையிட்டார்கள். படையை ஆயத்தம் செய்து ஹஸ்ரத் ஸிபாஹ் பின் உர்ஃபதஹ் ஃகஃப்பாரி (ரலி) அவர்களை பிரதிநிதியாக நியமதித்தார்கள். அன்னார் ஓராயிரம் ஸஹாபா பெருமக்களைக் கொண்ட படையை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அன்னார் (ரலி) இரவில் பயணம் செய்வார்கள்; பகல் முழுவதும் மறைந்திருப்பார்கள். பனூ உஸ்ராவை சார்ந்த ஒருவர் வழிகாட்டியாக அன்னாருடன் இருந்தார். அவருடைய பெயர் மஸ்கூர் ஆகும். அவர் மிகவும் திறமையான வழிகாட்டியாக இருந்தார். எதிரிக்கு செய்தி சென்றடைந்து விடக் கூடாது என்பதற்காக அவர் விரைவாக செல்பவராகவும், அறியப்படாத வழிகளை மேற்கொள்ளக் கூடியவராகவும் இருந்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் தூமத்துல் ஜந்தலுக்கு அருகில் சென்றடைந்த போது அந்த வழிகாட்டி இது பனூ தமீமுடைய மேய்ச்சல் நிலங்களாகும். இங்கு அவர்களுடைய ஒட்டகங்களும், கால்நடைகளும் உள்ளன. தாங்கள் இங்கு இருங்கள்; நான் தகவல்களை சேகரித்து வருகிறேன் என்று கூறினார். ஆகட்டும்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஆகவே அந்த நபர் தகவல் சேகரிப்பதற்காக தனியாக சென்றார். அங்கு கால்நடைகள் மற்றும் ஆடுகளின் தடயங்களை கண்டார். அம்மக்கள் தம் பதுங்குமிடங்களில் ஒளிந்து கொண்டிருந்தார்கள். பிறகு அவர் அன்னாரிடம் திரும்பி வந்தார். அம்மக்களின் இடங்களை அடையாளம் கண்டு விட்டதாக கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு, அவர்களின் கால்நடைகள் மீதும் மேய்ப்பாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தினார்கள். அவற்றுள் சிலவற்றை கைப்பற்றினார்கள். மற்ற மக்கள் ஓடி விட்டனர். இங்குமங்கும் சென்றுவிட்டார்கள். போருக்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்தவர்கள் ஒளிந்து கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களின் மைதானத்தில் முகாமிட்டு அங்கு சில நாட்கள் தங்கி இருந்தார்கள். பல்வேறு குழுக்களை சுற்றுவட்டாரத்தில் அனுப்பி வைத்தார்கள். இஸ்லாமிய குழுக்கள் பாதுகாப்பாக அன்னாரிடத்தில் திரும்பி வந்தன. ஒவ்வொரு குழுவும் சில ஒட்டகங்களை கொண்டு வந்தன. ஆனால் அவர்களுக்கு எந்த நபரும் கிடைக்கவில்லை. ஹஸ்ரத் முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் முன் ஒரு நபரை கொண்டு வந்தார்கள். அன்னார் அந்த நபரிடம் அவருடைய தோழர்களைக் குறித்து விசாரித்தார்கள். கடந்த இரவில் தாங்கள் அவர்களுடைய கால்நடைகளை பிடித்துக் கொண்டதாகக் கேள்விப்பட்டபோது அவர்கள் ஓடி விட்டார்கள் என்று அந்த நபர் கூறினார். அன்னார் அந்த நபருக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்புக் கொடுத்தார்கள்; அவர் முஸ்லிம் ஆகிவிட்டார்.

தூமத்துல் ஜந்தல் படையெடுப்பை குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் எழுதி இருக்கின்றார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: தூமத்துல் ஜந்தல் சிரியாவின் எல்லைப் பகுதிக்கு அருகில் இருந்த இடமாகும். மதீனாவில் இருந்து 15, 16 நாள் பயண தொலைவில் அது இருந்தது. இந்த படையெடுப்புக்கான காரணம் என்னவென்றால், தூமத்துல் ஜந்தல் பல மக்கள் ஒன்று சேர்ந்து கொள்ளை அடிக்கின்றார்கள் என்றும், பயணிகள் அல்லது பயணக் குழுக்கள் போன்றவை அங்கிருந்து கடந்து செல்லும் போது அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கின்றார்கள்; அவர்களின் செல்வத்தையும் பொருட்களையும் கொள்ளையடிக்கின்றார்கள் என்றும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்தது; அத்துடன் இம்மக்கள் மதீனாவின் பக்கம் திரும்பி முஸ்லிம்களுக்கு ஏதேனும் தொல்லைக்கு காரணமாக அமைந்து விடுவார்களோ என்ற அச்சமும் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் போர் நடவடிக்கைகளின் ஒரு முக்கிய நோக்கம் அமைதியை நிலைநாட்டுவதாக இருந்தது. அன்னாருடைய போர் நடவடிக்கைகளின் அசல் நோக்கம் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்பதாக இருந்தது. ஆகவே அந்த மக்கள் (அங்கு) கொள்ளை அடிப்பதால் மதீனத்து முஸ்லிம்களுக்கு உண்மையிலேயே பெரிய அச்சம் ஒன்றும் இல்லாத போதிலும் கொள்ளையடித்தல்

மற்றும் அநீதியின் இத்தொடரை தடுப்பதற்காக அங்கு செல்ல வேண்டும் என்று அன்னார் ஸஹாபிகளிடம் கவனமூட்டினார்கள். அன்னாருடைய கட்டளையினால் ஓராயிரம் ஸஹாபிகள் இந்த நெடுந்தூர சிரமமான பயணத்தை மேற்கொண்டு அன்னாருடன் சென்றார்கள். ஹிஜ்ரத்தின் ஐந்தாம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதத்தில் அன்னார் (ஸல்) மதீனாவில் இருந்து புறப்பட்டார்கள். 15,16 நாட்கள் நீண்ட கடினமான பயணத்தை கடந்த பிறகு தூமத்துல் ஐந்தல் அருகே சென்றடைந்தார்கள். ஆனால், அங்கு சென்றடைந்த பிறகுதான் அம்மக்கள் முஸ்லிம்கள் வருவதை அறிந்து இங்குமங்கும் சிதறி சென்று விட்டார்கள் என்று தெரிய வந்தது. ஆயினும், பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு சில நாட்கள் வரை தங்கி இருந்தார்கள். அந்த குழப்பவாதிகளைப் பற்றி ஏதாவது தகவல் தெரிய வருகிறதா? என்று பார்க்க சிறு சிறு படைப் பிரிவுகளை இங்குமங்கும் அன்னார் (ஸல்) அனுப்பி வைத்தார்கள். ஆனால், அவர்கள் எப்படி மாயமாகிப் போனார்கள் என்றால் அவர்களைப் பற்றி எந்த துப்பும் கிடைக்கவில்லை. ஆனால், அவர்களுடைய ஒரு மேய்ப்பாளன் முஸ்லிம்களின் கைகளால் சிறைப்பட்டு அன்னாருடைய தப்லீஃக்கினால் முஸ்லிமாக ஆகிவிட்டார். அன்னார் அங்கு சில நாட்கள் தங்கி இருந்த பிறகு மதீனாவுக்கு திரும்பி சென்று விட்டார்கள்.

தூமத்துல் ஐந்தலிலிருந்து திரும்பி வந்ததை பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பெருமானார் (ஸல்) அவர்கள் ஏறக்குறைய மூன்று நாட்கள் தங்கி இருந்த பிறகு அனைத்து படையினரையும் அழைத்துக் கொண்டு மதீனாவை நோக்கிப் புறப்பட்டார்கள். ரபீவுஸ் ஸானீ 20-ம் நாளன்று மதீனாவை சென்றடைந்தார்கள். தூமத்துல் ஐந்தல் படையெடுப்பின் நோக்கத்தைக் குறிப்பிட்டவாறு ஓர் எழுத்தாளர் இவ்வாறு எழுதுகிறார்: பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் இந்த படையெடுப்பிற்கு பல நோக்கங்கள் இருந்தன. இது ஒரு போராக இல்லாத போதிலும் இதன் மூலமாக அரேபிய தீபகற்பத்தின் வடக்குப் பகுதியில் உள்ள நிலைகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்கும், அவற்றை கண்டறிந்து கொள்வதற்கும் வாய்ப்பு கிடைத்தது. அரேபிய தீபகற்பத்தில் ஆற்றலின் உண்மையான தலைமையகத்தை கண்டறிந்து கொள்வதும் இதன் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. அத்துடன் துவ்மத்துல் ஐந்தல் படையெடுப்பு தம் விளைவைப் பொறுத்தவரையில், பயனைப் பொருத்தவரையிலும் மிகவும் பயனுள்ளதாக நிரூபணமானது. அனைத்து இடங்களைப் பற்றியும் தெரியவும் வேண்டும்; அத்துடன் அநீதியும் களையப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாக இருந்தது. எவ்வாறிருப்பினும், உண்மையிலேயே நடக்காத போர், இறை அருளினால் வரும் காலங்களில் முஸ்லிம்களுக்கு கிடைக்கவிருந்த வெற்றி மற்றும் உதவியின் விளைவுகளை காட்டக் கூடியதாக இருந்தது. இது ஒரு போர் நடவடிக்கையாக இருந்தது. உண்மையில் இது வருங்காலத்தில் நிகழ வாய்ப்பிருந்த போர்களை தடுத்து நிறுத்தக் கூடியதாக இருந்தது. உண்மையில் எந்தப் போர் நிகழ்வதற்கு வாய்ப்பு இருந்ததோ அதைத் தடுப்பதற்கான நடவடிக்கையாக இது இருந்தது. ஏனெனில், அந்த பகுதியைச் சார்ந்த பல அரேபிய கோத்திரங்கள் மதீனா மீது தாக்குதல் தொடுக்க எண்ணம் கொண்டிருந்தன. அத்துடன் இது அரசியல் போர் நடவடிக்கையாகவும் இருந்தது. ஏனெனில், அது அந்த கோத்திரங்களுடைய சாத்தியமான தாக்குதல்களை தடுத்து நிறுத்தி விட்டது. உஹது போருக்கு பிறகு முஸ்லிம்களின் தற்காலிக தோல்வியில் இருந்து பயனடைந்தவாறு மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்கலாம் என்று அவர்கள் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். அரேபியர்கள் ஒருபோதும் ரோம ஆட்சியுடன் போர் செய்ய முடியாது என்றிருந்த அரேபியர்களின் உளவியல் தாக்கத்தை நீக்குவதும் இந்தப் படையெடுப்புக்கான இன்னொரு நோக்கமாக இருந்தது. அதுவும் இந்த நடவடிக்கையால் நீங்கிவிட்டது. இதுவும் ஒரு நோக்கமாகும். இஸ்லாமிய தூதுச் செய்தி உலகளாவிய தூதுச் செய்தியாகும் ; அரேபியா வரை மட்டும் உட்பட்டது கிடையாது என்று செயல் ரீதியாக அவர்களுக்கு உறுதி அளிப்பதும் இதனுடைய நோக்கமாக இருந்தது. இந்த நடவடிக்கை முஸ்லிம்களுக்கு ஆறுதலையும் வழங்கி விட்டது. இந்த திடீர் படையெடுப்பு, தீர்ப்பை வழங்கிய நடவடிக்கைகள், நுட்பமான செயல்பாடுகளைக் கொண்ட திட்டங்கள் போன்றவற்றின் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய ஆட்சியில் அமைதி மற்றும் சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்தி, சூழ்நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் வெற்றி பெற்றார்கள். மேலும் காலத்தின் வேகமான போக்கு முஸ்லிம்களுக்கு சாதகமாக திரும்பிவிட்டது. அத்துடன் முஸ்லிம்களை நாலாப்புறமும் சுற்றி இருந்த தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்த உட்புற வெளிப்புற சிக்கல்களின் கடுமையை அது குறைத்து விட்டது.

எதிரிகளாக இருந்த பல மக்களும் இந்த (போர்) நடவடிக்கையால் விலகிக் கொண்டார்கள். உட்புற ரீதியாக நயவஞ்சகர்களும் இதனால் விலகிக் கொண்டார்கள். எந்த அளவுக்கு என்றால், நயவஞ்சகர்கள் மௌனமாகி, நிராசையடைந்து போனார்கள். அரேபியாவின் காட்டரபிகளும் தளர்ந்து போய் விட்டார்கள். இஸ்லாத்தை பரப்புவதற்கும், அனைத்துலகங்களின் இறைவனுடைய தூதுச் செய்தியை தப்லீஃக் செய்வதற்கும் முஸ்லிம்களுக்கு வாய்ப்பு கிடைத்தது.

பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பற்றி மிகவும் ஆழமான ஆய்வை மேற்கொண்டிருந்த ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் ( ரலி) அவர்களும் இதைக் குறித்து எழுதும்போது எழுதுகின்றார்கள்:

இந்த படையெடுப்பின் நோக்கம் அல்லது குறைந்தபட்சம் முக்கிய நோக்கம், நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதாக இருந்தது. இந்த வகையில் இது முதல் படையெடுப்பாக இருந்தது. தூமாவாசிகளுக்கு முஸ்லிம்களுடன் எந்தவொரு சண்டை சச்சரவும் இருக்கவில்லை. அவர்கள் மதீனாவில் இருந்து எந்த அளவு தொலைவில் இருந்தார்கள் என்றால், அவர்கள் இந்த நெடுந்தூர பயண சிரமங்களை மேற்கொண்டு மதீனத்து முஸ்லிம்களின் இன்னல்களுக்கு காரணமாக அமைந்தார்கள் என்று அச்சப்படும் அளவுக்கு வெளிப்படையில் உண்மையிலேயே அவர்களின் சார்பாக எந்த ஓர் ஆபத்திற்கும் இடம் இருக்கவில்லை. ஆகவே அம்மக்களை எதிர்கொள்வதற்காக 15,16 நாட்கள் துன்பமான பயணத்தை மேற்கொண்டு செல்வது என்பது, அவர்கள் தம் பகுதியில் வழிப்பறி, கொள்ளை போன்றவற்றில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்; அப்பாவி குழுக்களையும், பயணிகளையும் தொந்தரவு செய்து கொண்டிருந்தார்கள். அதை முடிவுக்கு கொண்டு வருவது மட்டுமே இதனுடைய நோக்கமாக இருந்ததேயன்றி, வேறு எந்தவொரு காரணமும் கிடையாது. ஆகவே முஸ்லிம்களுடைய இந்த படையெடுப்பு பொது மக்களின் பயன் மற்றும் நாட்டின் பொது நலனுக்காகவே இருந்தது. இதில் முஸ்லிம்களுடைய தனிப்பட்ட நோக்கம் ஒன்றும் இருக்கவில்லை. முஸ்லிம்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளையினால் ஆரம்ப காலத்தில் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இதை முற்றிலும் அநீதியான முறையில் எவர்கள் வன்முறை என்றும் சுயநலம் என்றும் கூறுகிறார்களோ அம்மக்களுக்கு இது செயல் ரீதியான பதிலாகும்.

இந்தப் படையெடுப்பின் விளைவாக தூமாவாசிகள் அச்சத்திற்குள்ளாகி குழப்பம் விளைவிக்கக் கூடிய தம் நடவடிக்கைகளை விட்டு விலகிக் கொண்டார்கள். அநீதிக்குள்ளான பயணிகளுக்கு அந்த அநீதியிலிருந்து இரட்சிப்பும் கிடைத்தது. இன்னொரு பக்கமோ சிரியாவின் எல்லைப் பகுதியில் தற்போது வரை முஸ்லிம்களுடைய பெயர் மட்டுமே சென்றடைந்திருந்தது. அம்மக்கள் இஸ்லாத்தின் உண்மையை முற்றிலும் அறியாதவர்களாக இருந்தார்கள். இந்த நடவடிக்கை மூலமாக அம்மக்களுக்கு இஸ்லாத்தைப் பற்றிய ஓர் அறிமுகம் ஏற்பட்டுவிட்டது. அந்த பகுதியைச் சார்ந்த மக்கள் முஸ்லிம்களுடைய வழிமுறை மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பற்றி ஓரளவுக்கு அறிந்து கொண்டார்கள். தூமத்துல் ஐந்தலுக்கு அருகிலும், அதன் சுற்றுவட்டாரத்திலும் சில கிறிஸ்தவர்கள் குடியிருந்தார்கள். குழப்பத்தை ஏற்படுத்திய எந்த மக்களுக்கு எதிராக இந்த படையெடுப்பு செய்யப்பட்டதோ அவர்கள் கிறிஸ்தவர்களா? அல்லது சிலை வணங்கிகளா? என்று அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை. ஆனால், சூழ்நிலையை பார்க்கும்போது அநேகமாக அம்மக்கள் இணை வைப்பாளர்களாக இருந்தார்கள் என்பதை அனுமானிக்க முடிகிறது. ஏனெனில், இந்த படையெடுப்பு கிறிஸ்தவர்களுக்கு எதிராக இருந்திருக்கும் என்றால் வரலாற்று ஆசிரியர்கள் நிச்சயமாக இதை குறிப்பிட்டு இருப்பார்கள். கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர்கள் கண்டிப்பாக இதைப் பற்றி எழுதி இருப்பார்கள். எவ்வாறிருப்பினும், அல்லாஹ்வே நன்கறிவான்.

இந்த படையெடுப்புகளில் இருந்து நிரூபணமாவது என்னவென்றால், இது எதிரிகளின் தீங்கை தடுப்பதற்காகவும், அவர்களின் தீய நோக்கங்களை முடிவுக்கு கொண்டுவருவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கொலை செய்வதற்காகவோ அல்லது தகாத பயன்களுக்காகவோ அல்லது அமைதியை சீர்குலைப்பதற்காகவோ இது மேற்கொள்ளப்படவில்லை. இஸ்லாத்தின் மீதும், பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும் செய்யப்படும் அவதூறுகளுக்கு இந்த சம்பவங்கள் மறுப்பு தெரிவிக்கின்றன. ஏனெனில், போர் நடைபெறாத காரணத்தால் முஸ்லிம்கள் அமைதியுடன் திரும்பியும் வந்து விட்டார்கள். எவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. மேலும் அந்தப் பகுதிகளில் முஸ்லிம்களுடைய இந்த நடவடிக்கையால் பொதுவாக அமைதியும் ஏற்பட்டு விட்டது. அநீதியில் இருந்து முஸ்லிம்

(பயண) குழுக்களுக்கு மட்டுமின்றி இதர கோத்திரங்களுக்கும் இரட்சிப்பு கிடைத்தது.

இந்த இரு படையெடுப்புகளை பற்றிய குறிப்பு இங்கு நிறைவு பெறுகின்றது.

மீண்டும் துஆக்களின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். அல்லாஹ் உலகில் பொது அமைதியை நிலைபெறச் செய்வதற்காக துஆ செய்யுங்கள். அந்த அமைதியை தம் காலத்திலும் நிலைநாட்டுவதற்காக பெருமானார் (ஸல்)அவர்கள் முயற்சி செய்தார்கள். இது அன்னாருடைய வருகையின் நோக்கமாக இருந்தது; இஸ்லாமிய போதனையின் நோக்கமாக உள்ளது; இந்த அனைத்தும் அல்லாஹ்வுடைய சிறப்பான அருளினால் மட்டுமே நிகழ முடியும். இதற்காக துஆக்களின் தேவை உள்ளது.

இப்போது உலகவாதிகள் தம்மைத்தாமே காயப்படுத்திக் கொள்வதை விட்டு விலக மாட்டார்கள் என்பது போன்று வெளிப்படையில் தெரிகின்றது. வெளிப்படையான முறையில் அமைதிக்கான சூழல் தென்படவில்லை.

இரண்டாவது விஷயம், இந்த மேற்கத்திய நாடுகளில் இப்பொழுது முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் மிகவும் வேகம் எடுத்துள்ளன ; வேகம் எடுக்கும்; அது இன்னும் அதிகரிக்கும் என்றே தோன்றுகின்றது. இதற்காகவும் முஸ்லிம்கள் தம் இருப்பிற்காகவும் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் ஒற்றுமையாக ஆக வேண்டும். தம் நிலைகளை மேம்படுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களை புரியக் கூடியவர்களாக ஆக்குவானாக.

முஸ்லிம் நாடுகளில், சூடான் போன்றவற்றில் முஸ்லிம்களை முஸ்லிம்கள் மீது அநீதி இழைத்து வருகிறார்கள். அதற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் அமைதியை நிலைநாட்ட கூடிய நல்வாய்ப்பை வழங்குவானாக. தம் மார்க்க நோக்கத்தை இவர்கள் மறந்து விட்டார்கள்; தம் சகோதரர்களை கொல்கிறார்கள். இதன் காரணமாகத்தான் அந்நியர்களும் முஸ்லிம்கள் மீது அநீதியிழைக்கின்றார்கள். தம்முடைய ஆணவம் மற்றும் சுயவிருப்பங்களை பூர்த்தி செய்வதற்கு பகரமாக நாடு மற்றும் சமுதாயத்திற்கு தொண்டாற்ற கூடியவர்களாக அல்லாஹ் அவர்களை ஆக்குவானாக. அமைதியை சீர்குலைக்கக் கூடியவர்களாக ஆகாமல் அமைதியை ஏற்படுத்த கூடியவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக.

தமிழாக்கம்

மவ்லவி APA தாரிக் அஹ்மத்

* * * * * * *


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)



**1ம் பக்கத் தொடர்ச்சி**
**(தஃப்ஸீரே கபீர்)..........**


ஒவ்வொரு நபரின் மீதும் கடமை என்னவென்றால் அவர் இந்த தீமையை முழுமையான ஆற்றலுடன் எதிர்க்க வேண்டும். மேலும் அதனை நசுக்குவதில் எந்தக் குறையும் வைக்கக் கூடாது. ஏனெனில், பொய் பேசக் கூடியவர் பிறரை ஏமாற்றுதவற்கு முயற்சி செய்கின்றார். மேலும் ஏமாற்றுதல் எப்படிப்பட்ட விஷயம் என்றால், அதனால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே பொய் பேசக் கூடியவர் ஒழுக்க ரீதியிலான குற்றவாளி மட்டும் கிடையாது; மாறாக மனித குலத்தின் எதிரியும், அதனை அழிக்கக் கூடியவரும் ஆவார். மேலும் இந்தக் குறையை அழிப்பது ஒவ்வொரு உண்மையான மற்றும் தூய முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

இறைத் தூதர் (ஸல்)அவர்கள் நயவஞ்சகர்களின் அடையாளத்தை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்: அவருடைய ஓர் அடையாளம் இதுவாகும். அதாவது அவர் பேசும்போது பொய் பேசுவார். மேலும் நயவஞ்சகன் தொடர்பாக திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: (நயவஞ்சகராகிய) அவர் நரகத்தின் மிகக் கடுமையான இடத்தில் வைக்கப்படுவார். ஆக, இறைவன் நிராகரிப்பாளர்களுடன் நடந்து கொள்வதை காட்டிலும் நயவஞ்சகர்களுடன் கடுமையாக நடந்து கொள்வான். ஏனெனில், நிராகரிப்பாளரின் காரணமாக நிராகரிப்பாளருக்கே பாதிப்பு ஏற்படுகின்றது. ஆனால், நயவஞ்சகனின் காரணமாக முஸ்லிம்களுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. எந்த சமுதாயத்தால் தனது நபர்களிடமிருந்து பொய்யை அழிக்க முடியாதோ மேலும் அதன் பின்னரும் தனக்கு கண்ணியமும், முன்னேற்றமும் கிடைத்து விடும் என்று அந்த சமுதாயம் கருதுகின்றது என்றால் அதன் நிலை இவ்வாறு குறைபாடு கொண்டதாகும். அதாவது தான் நிலவிற்கு சென்று விடுவேன்; நட்சத்திரங்களின் பக்கம் சென்று விடுவேன் என்று ஒரு குழந்தை எண்ணுவதைப் போன்றதாகும். எவ்வாறு நிலவு மற்றும் நட்சத்திரங்களின் பக்கம் சென்று விடுவேன் என்ற ஒரு குழந்தையின் ஆசை தோல்வியடைந்து விடுகின்றதோ அதே போன்று எந்த சமுதாயத்திடம் பொய் காணப்படுகின்றதோ அந்த சமுதாயம் ஒருபோதும் வெற்றி பெற முடியாது.

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் உண்மை மற்றும் நேர்மையின் நிலை இவ்வாறானதாக இருந்தது. அதாவது அன்னார் (ஸல்) ஒருமுறை பொய் பேசினார்கள் ; அல்லது அன்னார் உடன்படிக்கையை மீறினார்கள் (நவூதுபில்லாஹ்) என்று அன்னார் (ஸல்) தொடர்பாக கூறுவதற்கு அன்னாருடன் சண்டையிட்ட கடும் ஓர் எதிரி கூட துணிவு கொள்ள மாட்டான். இது எப்படிப்பட்ட விஷயம் என்றால், இதன் காரணமாகவே முஸ்லிம்கள் எந்த நாட்டிற்கு சென்றாலும் அந்த நாட்டின் குடிமக்கள் அவர்களின் உயர் நல்லொழுக்கங்களைப் பார்த்து அவர்களை எந்த அளவிற்கு நேசத்திற்குரியவர்களாக ஆக்கிக் கொள்கின்றனர் என்றால் அவர்கள் தனது சமுதாயம் மற்றும் தனது மார்க்கத்தைச் சேர்ந்தவர்களைக் காட்டிலும் அவர்களுக்கு அதிக கண்ணியம் கொடுக்கின்றனர்; மேலும் அவர்களின் நலனுக்காக துஆ செய்கின்றனர்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 41, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * *

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)


**12ம் பக்கத் தொடர்ச்சி**
**(12.7.24 குத்பா பேருரை)..**


அன்னாரின் மகள் மேலும் கூறினார்கள்; தாயாரின் மரணத்திற்குப் பிறகு அன்னாருடன் சென்று தங்குவதற்கு நான் தீர்மானித்தேன். மேலும் பிள்ளைகளுடன் அன்னாரிடம் சென்று விட்டேன். மேலும் நான் சென்ற உடனேயே அன்னார் எனக்கு இவ்வாறு அறிவுரை வழங்கினார்கள்: அதாவது என்னுடன் தங்க வேண்டும் என்றால், பின்னர் பிள்ளைகளுக்கு இதனை புரிய வைத்து விடுங்கள். அதாவது அவர்கள் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதைப் பேண வேண்டும்; ஜமாஅத் நிகழ்ச்சிகளில் பங்கு பெற வேண்டும் ; மாலைக்கு பிறகு வீட்டை விட்டு வெளியே செல்லக் கூடாது; மேலும் ஜமாஅத் பொறுப்பாளர்கள் தரப்பலிருந்து அழைக்கப்பட்டால் மறுக்கக் கூடாது போன்ற விஷயங்களை அறிவுரையாக முன்வைத்தார்கள்.

கூறுகின்றார்கள்: இந்த தர்ப்பியத்தால் எனக்கு மிகவும் பயன் விளைந்தது.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகள் மற்றும் சந்ததியினருக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு சவ்த்ரி அலி அக்பர் ஸாஹிப் அவர்களின் மகனும், நாயிப் நாஸிர் உமூரே ஆமாவும் ஆகிய மதிப்பிற்குரிய சவ்த்ரி மத்திஉர்ரஹ்மான் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் தமது 89ம் வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْن

பிறப்பால் அஹ்மதியாக இருந்தார்கள். அன்னாருடைய குடும்பத்தில் அன்னாரின் தந்தையார் சவ்த்ரி அலி அக்பர் ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் 1916-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாவது கிலாஃபத் காலத்தில் பைஅத் செய்வதற்கான நற்பேறு பெற்றார்கள். பாகிஸ்தான் உருவான பிறகு அன்னாரின் தந்தையார் சவ்த்ரி அலி அக்பர் ஸாஹிப் அவர்களுக்கு நாயிப் நாஸிர் தஃலீம் ஆக ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கும் நற்பேறு கிடைத்தது. சவ்த்ரி மத்திஉர் ரஹ்மான் ஸாஹிப் அவர்கள் தொடக்கக் கல்வியை காதியானில் பயின்றார்கள். பாகிஸ்தான் உருவான பிறகு படிப்பை முழுமை செய்து கல்வித் துறையுடன் தொடர்புடையவர்களாக ஆகிவிட்டார்கள். பணி ஓய்வு பெற்ற பிறகு ஜமாஅத் தொண்டு செய்வதற்காக அன்னார் முன் வந்தார்கள்.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)**

தமிழாக்கம்

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM



Dealers of Natural Precious & Semi-Precious Gemstones

TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com

Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com

HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

# ஜுமுஆ பேருரை

**பனூ முஸ்தலிக் போர் சூழ்நிலைகள் மற்றும் சம்பவங்கள்**

**மற்றும் முஹர்ரம் நாட்களில் தரூத் ஷரீஃப் ஓதுவதற்கும் துஆ செய்வதற்கும் அறிவுரை**

பனூ முஸ்தலிக் கோத்திரத்தின் தலைவன் ஹாரிஸ் பின் அபீ ஸிரார் என்பவன் தமது சமுதாயத்தையும் அரேபியர்களையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போர் புரிவதற்காக ஆயத்தப்படுத்தினான். மேலும் மதீனாவில் இருந்து சுமார் 96 மைல் தொலைவில் இருந்த ஓர் இடத்தில் படையை ஒன்றுதிரட்டத் துவங்கிவிட்டான்

உதவி வழங்கப்பட்டவரே! கொல்வீராக! கொல்வீராக! என்ற முழக்கம்
பனூ முஸ்தலிக் நாளன்று முஸ்லிம்களின் முழக்கமாக இருந்தது

இந்த நாட்களில் அஹ்மதிகள் தரூத் ஷரீஃப் ஓதுவது மற்றும் முஸ்லிம்களின் ஒற்றுமைக்காக குறிப்பாக துஆக்கள் செய்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் தங்களது நிலைமைகளையும் சிறந்தாக ஆக்குவதற்கும், மேலும் அல்லாஹ்வுடன் தொடர்பை அதிகரித்துக் கொள்வதன் பக்கமும் நாம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும்

மதிப்பிற்குரிய போன்ஜா மஹ்மூத் ஸாஹிப் ஷஹீது, மதிப்பிற்குரிய ரஷீது அஹ்மத் ஸாஹிப், மதிப்பிற்குரிய சவ்த்ரி மத்தீஉர் ரஹ்மான் ஸாஹிப் மதிப்பிற்குரிய மன்ஸூர் பேகம் ஸாஹிபா மதிப்பிற்குரிய ஸஅதத்துல்லாஹ் ஸாஹிப் போன்ற மர்ஹூம்களின் நற்குறிப்புகளும் ஜனாஸா காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 ஜுலை 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **வஃபா** மாதம் **12 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்று நான் பனூ முஸ்தலிக் போர் அல்லது முரைஸீஃ போர் பற்றி எடுத்துரைப்பேன். (பனூ முஸ்தலிக் போருக்கு) முரைஸீஃ போர் என்ற இந்தப் பெயரும் அதற்கு உள்ளது. இந்தப் போர் எப்போது நிகழ்ந்தது? என்பது குறித்து வாழ்க்கை வரலாற்றாசிரியர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு இருக்கின்றது. அல்லாமா இப்னு இஸ்ஹாக், தபரீ மற்றும் இப்னு ஹிஷ்ஷாம் ஆகியோரைப் பொருத்த வரை பனூ முஸ்தலிக் ஹிஜ்ரி 6-ம் வருடம் ஷஃபான் மாதம் நடைபெற்றது.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா, இப்னு இஸ்ஹாக், பக்கம் 439, தாருல் குதுபில் இல்மியா)

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா, லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 669 - 670 தாருல் குதுபில் இல்மியா)

(தாரிகே தபரீ, தொகுதி 2, பக்கம் 109, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

சிலர் இது ஹிஜ்ரி 5-ம் ஆண்டில் நிகழ்ந்ததாக எடுத்துரைத்துள்ளனர்.

(துப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅத், தொகுதி 2, பக்கம் 48, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1990)

ஸஹீஹ் புகாரியில் மூஸா பின் உக்பா அவர்களின் அறிவிப்பு இவ்வாறு வருகின்றது. பனூ முஸ்தலிக் போர் ஹிஜ்ரி 4-ம் வருடம் நிகழ்ந்தது. ஆனால், புகாரி விரிவுரையில் அல்லாமா இப்னி ஹஜர் அஸ்கலானீ இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது இது எழுத்துப் பிழையாகும். அவர்கள் ஹிஜ்ரி 5-ம் வருடம் என எழுத விரும்பியிருந்தார்கள். ஆனால், ஹிஜ்ரி 4-ம் வருடம் என்று எழுதப்பட்டுள்ளது என்று அன்னார் எழுதியுள்ளார்கள்.

(ஃபத்ஹுல் பாரி, தொகுதி 7, பக்கம் 430, கிதாபுல் மகாஸீ)

இந்தப் போர் தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் தமது ஆராய்ச்சியை எழுதியுள்ளார்கள். கூறுகின்றார்கள்: பனூ முஸ்தலிக் போர் நிகழ்ந்த வரலாறு ஹிஜ்ரி 5-ம் வருடம் ஷஃபான் மாதம் ஆகும். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூல் - பக்கம் 557)

இந்தப் போர் என்பது குஸாஅஃ என்ற கோத்திரத்தின் கிளையான பனூ முஸ்தலிக் உடன் நிகழ்ந்தது. எனவே இந்தப் போர் பனூ முஸ்தலிக் என்றழைக்கப்படுகின்றது. மேலும் இந்தக் கோத்திரம் ஒரு கிணற்றுக்கு அருகில் வசித்து வந்தது. அதனை முரைஸீஃ என்றும் கூறிவந்தார்கள். இதன் காரணமாக இந்தப் போரின் இரண்டாவது பெயர் முரைஸீஃ போர் என்பதும் ஆகும். முரைஸீஃ என்ற இடம் மதீனாவில் இருந்து சுமார் நூற்றி எட்டு மைல் தொலைவில் உள்ளது. ( அத்தப்காத்துல் குப்ரா, தொகுதி 2, பக்கம் 48, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1990-ம் ஆண்டு)

பனூ முஸ்தலிக் குறைஷியர்களின் கூட்டாளிகளாக இருந்தனர். அவர்கள் மக்காவின் சுற்று வட்டாரப் பகுதியில் இருந்த ஹபஷீ என்ற பெயர் கொண்ட மலை அடிவாரத்தில் ஒன்று கூடி இவ்வாறு சத்தியம் செய்தனர். அதாவது நாம் ஓர் உயிராக திகழ்ந்து குறைஷியர்களுக்கு ஆதரவாக இருப்போம் என்று அவர்கள் சத்தியம் செய்தனர். எனவே அந்த மக்கள் அஹாபீஷ் என்றழைக்கப்பட தொடங்கினர். மேலும் இதே ஒப்பந்தத்தின் கீழ் பனூ முஸ்தலிக் உஹது போரில் குறைஷிய நிராகரிப்பாளர்களின் படையில் பங்குப் பெற்றிருந்தனர்.

(ஸீரத் அல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 297,, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இந்தப் போருக்கான ஒரு காரணம் இந்த விஷயமாக அமைந்தது. அதாவது, பனூ முஸ்தலிக் இஸ்லாத்தின் எதிர்ப்பில் குருடர்களாக ஆகியிருந்தனர். மேலும் தொடர்ந்து அதில் முன்னேறிக் கொண்டே இருந்தனர். அவர்களுக்கு குறைஷிய நிராகரிப்பாளர்களின் முழுமையான ஆதரவும், உதவியும் கிடைத்துக் கொண்டிருந்தது. உஹது போரில் முஸ்லிம்களுக்கு எதிராக போரில் பங்கு பெற்றதன் காரணமாக தற்போது இவர்கள் வெளிப்படையாக முஸ்லிம்களுக்கு எதிராக வந்திருந்தனர். மேலும் அவர்களின் வரம்பு மீறுதல் மிகவும் அதிகரித்து விட்டது.

இரண்டாவது விஷயம் இதுவாக இருந்தது. அதாவது புனித மக்கா நகரத்துக்கு செல்லக் கூடிய முக்கிய சாலை பனூ முஸ்தலிக் உடைய கட்டுப்பாட்டில் இருந்தது. இந்த மக்கள் மக்காவில் முஸ்லிம்கள் வந்து செல்வதை தடுப்பதற்காக வலிமையான தடுப்பு அரணாக திகழ்ந்து வந்தனர். (அறிவிப்புகள்: இப்ராஹீம் பின் இப்ராஹீம் என்ற வரலாற்றாசிரியரின் பனூ முஸ்தலிக் போர் என்ற நூல், பக்கம் 89, பதிப்பு அஹ்யாத் தராஸூல் இஸ்லாமி)

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

இந்தப் போருக்கான மூன்றாவது மற்றும் எல்லாவற்றையும் விட மிக முக்கியக் காரணமாக இந்த விஷயம் இருந்தது. அதாவது, பனூ முஸ்தலிக் கோத்திரத்தின் தலைவர் ஹாரிஸ் பின் அபீ ஸிரார் என்பவன் தனது சமுதாயம் மற்றும் அரேபியர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக போர் செய்வதற்கு ஆயத்தப்படுத்தினான். மேலும் மதீனாவில் இருந்து 96 கி.மீ தொலைவில் படையை ஓரிடத்தில் ஒன்று கூட்ட துவங்கியிருந்தான். (ஸுபுலுல் ஹுதா வர்ரஷாத், தொகுதி 4, பக்கம் 344, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993-ம் ஆண்டு)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இது தொடர்பாக எழுதியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

குறைஷியர்களின் எதிர்ப்பு நாளுக்கு நாள் அதிக அபாயகரமான வடிவத்தை அடைந்து கொண்டே சென்றது. அவர்கள் தங்களது சூழ்ச்சிகளால் அரேபியாவின் ஏராளமான கோத்திரங்களை இஸ்லாத்திற்கு எதிராகவும், இஸ்லாத்தின் தோற்றுனருக்கு எதிராகவும் நிறுத்தி விட்டிருந்தனர். ஆனால், தற்போது அவர்களின் பகைமை ஒரு புதிய அபாயத்தை உருவாக்கி விட்டிருந்தது. அதாவது முஸ்லிம்களுடன் நல்ல தொடர்புகள் வைத்திருந்த மக்காவின் அந்தக் கோத்திரங்களும் குறைஷிகள் ஏற்படுத்திய குழப்பத்தால் முஸ்லிம்களுக்கு எதிராக கிளர்ந்தெழத் துவங்கி விட்டனர். இந்த விவகாரத்தில் பனூ குஸாஅஃ கோத்திரத்தினரின் பிரபலமான ஒரு கிளையாகிய பனூ முஸ்தலிக் முந்திக் கொண்டது. மேலும் மதீனாவின் மீது தாக்குதல் நடத்த ஆயத்தங்களைத் துவங்கி விட்டனர். அவர்களின் தலைவன் ஹாரிஸ் பின் அபீ ஸிரார் என்பவன் இந்த ஊரிலுள்ள மற்ற கோத்திரங்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 557)

பனூ முஸ்தலிக் செய்த இந்த ஆயத்தத்தைப் பற்றிய தகவல் ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் புரைதஃ பின் ஹுஸைப் அஸ்லமீ (ரலி) அவர்களை நிலைமையை அறிந்து வருவதற்காக அனுப்பி வைத்தார்கள். அன்னார் (ரலி) புறப்பட்டார்கள். மேலும் அவர்களுடைய நீரூற்றில் அவர்களை சென்று சந்தித்தார்கள். புரைதஃ (ரலி) அவர்கள் ஏமாற்றுக்கார சமுதாயத்தைக் கண்டார்கள். அந்த சமுதாயமானது தான் மட்டும் ஒன்று கூடியிருக்கவில்லை. மாறாக அவர்கள் சுற்று வட்டார மக்களுடைய படையையும் ஒன்று திரட்டி வைத்திருந்தார்கள். நீர் யார்? என்று அந்த மக்கள் ஹஸ்ரத் புரைதஃ (ரலி) அவர்களிடம் கேட்டனர். நான் உங்களில் ஒருவனே ஆவேன் ; நான் உங்களுடைய படையெடுப்பை கேள்விப்பட்டு இங்கு வந்துள்ளேன் என்று ஹஸ்ரத் புரைதஃ (ரலி) அவர்கள் கூறினார்கள். இவ்வாறு தமது மதிநுட்பமான திட்டத்துடன் அந்த மக்களின் போர் ஆயத்தங்களை நன்றாக ஆய்வு செய்தவாறு ஹஸ்ரத் புரைதஃ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். மேலும் அந்த மக்களின் நிலைமைகளை எடுத்துக் கூறினார்கள். அன்னார் (ஸல்) முஸ்லிம்களை அழைத்தார்கள். மேலும் எதிரிகளை குறித்த தகவல்களை கூறினார்கள். மேலும் இஸ்லாமியப் படை விரைவாக தயாராகி புறப்பட்டு விட்டது.

பனூ முஸ்தலிக் பக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறப்பட்டதன் விளக்கம் ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களை மதீனாவின் பிரதிநிதியாக நியமித்தார்கள். இப்னு ஹிஷ்ஷாம் அவர்கள் ஹஸ்ரத் அபூதர் ஃகஃப்பாரீ (ரலி) அவர்களின் பெயரை குறிப்பிட்டுள்ளார்கள். இதேபோன்று ஹஸ்ரத் நுமைலஃ பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்களின் பெயரும் எடுத்துரைக்கப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும், இந்தப் படை புறப்பட்டு விட்டது.

இஸ்லாமியப் படை எழுநூறு நபர்களை கொண்டதாக இருந்தது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஷஃபான் மாதம் 2-ம் நாள் ஹிஜ்ரி 5-ம் ஆண்டு திங்கட்கிழமை மதீனா முனவ்வராவிலிருந்து புறப்பட்டு சென்றது. மேலும் இஸ்லாமியப் படையை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிகை நோக்கி புறப்பட்டார்கள். ஹஸ்ரத் மஸுஊது பின் ஹுனைதஃ (ரலி) அவர்கள் முரைஸீஃ போரின் போது வழிப்பாதை கைட் (வழிகாட்டி) ஆக இருந்தார்கள். இந்தப் பயணத்தில் முஸ்லிம்களிடத்தில் மொத்தம் 30 குதிரைகள் இருந்தன. அவற்றில் முஹாஜிர்களிடத்தில் பத்து குதிரைகள் இருந்தன. ஹுஸுர் (ஸல்) அவர்களுடைய இரண்டு குதிரைகள் இருந்தன. லிஸார் மற்றும் ஸரிப் என்ற குதிரைகள் இருந்தன. எந்த முஹாஜிர்களிடத்தில் குதிரைகள் இருந்தனவோ அவர்களின் பெயர்கள் கீழ்கண்டவாறு ஆகும். ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள். ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் கனீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மிக்தாத் பின் அம்ர் (ரலி) அவர்கள். மேலும் அன்ஸாரி ஸஹாபிகளில் 20 குதிரை சவாரிகள் இருந்தனர். அவர்களில் 15 நபர்களின் பெயர்கள் கிடைக்கின்றன. அவர்களின் பெயர்கள் கீழ்வருமாறு: ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள். ஹஸ்ரத் உஸைத் பின் ஹுழைர் (ரலி) அவர்கள். ஹஸ்ரத் அபூ அப்ஸ் பின் ஜப்ர் (ரலி) அவர்கள். ஹஸ்ரத் கத்தாதஃ பின் நுஃமான் (ரலி) அவர்கள். ஹஸ்ரத் உவைம் பின் ஸாஇதஃ (ரலி) அவர்கள். ஹஸ்ரத் மஃனி பின் அதீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸஅத் பின் ஸைத் அஷ்ஹலீ (ரலி) அவர்கள். ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹஸ்மஃ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள்.ஹஸ்ரத் கத்தாதஃ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபுவாபீ பின் கஅப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் குபாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸியாத் பின் வலீத் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஃபர்வஃ பின் அம்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் முஆஸ் பின் ரிஃபாஅஃ பின் ராஃபி (ரலி) அவர்கள்.

எவ்வாறு இருப்பினும், அதன் விளக்கத்தில் கூடுதலாக இந்த விஷயமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஏராளமான நயவஞ்சகர்களும் புறப்பட்டனர். அவர்கள் அதற்கு முன்னர் இவ்வாறு வேறு எந்த போருக்காகவும் புறப்பட்டிருக்கவில்லை. அவர்கள் ஏன் புறப்பட்டனர்? கூறுகின்றார்கள்:

அவர்களுக்கு ஜிஹாத் செய்வதற்கான ஆர்வம் இருக்கவில்லை. மாறாக அவர்கள் போர் செல்வங்களுக்காக புறப்பட்டிருந்தனர். வெற்றிக் கிடைத்தால் நமக்கு போர் செல்வங்கள் கிடைக்கும் என்பதற்காக அவர்கள் புறப்பட்டிருந்தனர்.

(ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத் தொகுதி 4, பக்கம் 344, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 1993-ம் ஆண்டு)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இது குறித்த இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவத்தை பற்றிய தகவல் கிடைத்தபோது, அன்னார் (ஸல்) கூடுதலான தற்காப்பு நடவடிக்கையாக தமது ஒரு ஸஹாபி புரைதஃ பின் ஹுஸைப் (ரலி) அவர்களை நிலைமையை அறிந்து வருவதற்காக பனூ முஸ்தலிக் கோத்திரத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும் மிக விரைவாக திரும்பி வந்து உண்மையான நிலவரத்தை குறித்து தமக்கு தகவல் கொடுங்கள் என்று அன்னார் (ஸல்) அந்த ஸஹாபிக்கு வலியுறுத்தியிருந்தார்கள். என்ன நடந்தது? உண்மை என்ன? என்று இது தொடர்பாக கூறுங்கள் என்று கட்டளையிட்டிருந்தார்கள். புரைதஃ சென்றபோது உண்மையில் ஒரு மாபெரும் கூட்டம் உள்ளது; மேலும் மிக வேகமாகவும், அழுத்தமாகவும் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு தயாரிப்புகள் நடந்து வருகின்றன என்பதையும் கண்டார்கள். அன்னார் (ரலி) உடனடியாக திரும்பி வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கொடுத்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) வழக்கம்போல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பனூ முஸ்தலிக் கோத்திரத்தை நோக்கி புறப்பட்டுச் செல்வதற்கு வழிகாட்டினார்கள். அவர்கள் முதலில் தாக்குதல் நடத்துவதற்கு பகரமாக நீங்கள் முன்னதாக அவர்களை நோக்கி புறப்பட்டு விடுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஏராளமான ஸஹாபிகள் அன்னாருடன் செல்வதற்கு தயாராகி விட்டார்கள். இன்னும் கூறப்போனால், இதற்கு முன்னால் அவ்வளவு எண்ணிக்கையில் பங்கு பெற்றிராத நயவஞ்சகர்களின் ஒரு பெரும் கூட்டமும் இணைந்து கொண்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் அபூதர் ஃகஃப்பாரீ (ரலி) அவர்களை அல்லது சில அறிவிப்புகளின் அடிப்படையில் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களை மதீனாவின் அமீராக நியமித்து விட்டு அல்லாஹ்வின் பெயரை எடுத்துரைத்தவாறு ஷஃபான் மாதம் ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு மதீனாவில் இருந்து புறப்பட்டு விட்டார்கள். படையில் வெறும் முப்பது குதிரைகள் மட்டுமே இருந்தன. எனினும், ஒட்டகங்களின் எண்ணிக்கை ஓரளவு அதிகமாக இருந்தது. மேலும் இதே குதிரைகள் மற்றும் ஒட்டகங்களில் முஸ்லிம்கள் இணைந்து ஒவ்வொருவராக சவாரி செய்து வந்தார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத்

காத்தமுன்னபிய்யீன், பக்கம் 557 - 558)

இது குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூடுதலாக எடுத்துரைக்கின்றார்கள்:

அதாவது வழியில், முஸ்லிம்களிடம் நிராகரிப்பாளர்களின் ஓர் உளவாளி மாட்டிக் கொண்டார். அவரை அவர்கள் பிடித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜர்படுத்தினார்கள். மேலும், அவர் உண்மையிலேயே உளவாளி தானா? என்று அன்னார் (ஸல்) விசாரணை செய்த பிறகு, அவரிடம் நிராகரிப்பாளர்களைக் குறித்த நிலவரங்கள் போன்றவற்றை விசாரிக்க விரும்பியிருந்தார்கள். ஆனால், அவன் கூறுவதற்கு மறுத்து விட்டான். அவனது நடவடிக்கை சந்தேகத்திற்குரியதாக இருந்தது. எனவே அப்போது நடைமுறையில் இருந்த சட்டங்களுக்கு ஏற்ப அதாவது, அக்காலத்தில் என்ன சட்டம் நடைமுறையில் இருந்ததோ அதற்கேற்ப ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனை கொன்று விட்டார்கள். மேலும் அதன் பிறகு இஸ்லாமியப் படை முன்னோக்கி புறப்பட்டுச் சென்றது. பனூ முஸ்தலிக் கோத்திரத்திற்கு முஸ்லிம்களின் வருகை பற்றிய தகவல் கிடைத்தது. மேலும், தங்களின் உளவாளி கொல்லப்பட்டு விட்டார் என்ற தகவலும் அவர்களுக்கு கிடைத்தது. எனவே அவர்கள் மிகவும் அச்சமடைந்து விட்டார்கள். ஏனெனில், எப்படியாவது மதீனாவின் மீது திடீர் தாக்குதல் தொடுப்பதற்கு வாய்ப்பு கிடைத்து விட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாக தற்போது அவர்களுக்கு இலாபம் ஈட்டுவதற்கு பகரமாக நஷ்டத்தை சந்திக்க வேண்டியதாகிவிட்டது. எனவே அவர்கள் மிகவும் பதற்றமடைந்து விட்டனர். மேலும் (பனூ முஸ்தலிக் கோத்திரத்தைச் சேர்ந்த) அவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒன்று திரண்டிருந்த மற்ற கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள் இறைவனின் ஆதிக்கத்தின் கீழ் எப்படி அஞ்சினர்? என்றால், உடனே (பனூ முஸ்தலிக் கோத்திரத்தைச் சார்ந்த) அவர்களுக்கு உதவி செய்வதை விட்டு விட்டு தங்களது வீடுகளுக்கு சென்று விட்டனர். ஆனால், குறைஷிகள் முஸ்லிம்களின் பகைமை தொடர்பாக, பனூ முஸ்தலிக் கோத்திரத்தைச் சார்ந்தவர்களுக்கு எப்படிப்பட்ட சுவையை சுவைக்கச் செய்தனர் என்றால், அவர்கள் அதற்குப் பிறகும் போரின் எண்ணத்திலிருந்து விலகவில்லை. மேலும், முழு ஆயத்தத்துடன் இஸ்லாமியப் படையை எதிர்ப்பதற்காக விருப்பம் கொண்டிருந்தனர். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன்,பக்கம் 558)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முரைஸீஃ கோத்திரத்தைச் சென்றடைந்தபோது, அன்னாருக்காக தோலாலான கூடாரம் அமைக்கப்பட்டது. அன்னாரின் பரிசுத்த துணைவியார்களில் ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்கள் அன்னாருடன் இருந்தார்கள். சில வரலாற்றாசிரியர்கள் ஹஸ்ரத் உம்மே ஸலமா (ரலி) அவர்களின் பெயரை குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது அன்னாரும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் இருந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆனால், அல்லாமா இப்னி ஹஜர் அவர்கள், ஹஸ்ரத் உம்மே ஸலமா (ரலி) அவர்களும் உடன் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள அப்படிப்பட்ட அறிவிப்புகளை பலவீனமானவையாக குறிப்பிட்டுள்ளார்கள். அவர்களைப் பொருத்த வரை புகாரியின் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சொற்கள் இவ்வாறு இருக்கின்றன ;

فَخَرَجَ سَهْمِي

பொருள்: சீட்டு குலுக்கிப் போடப்பட்டபோது எனது பெயர் வந்தது. இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இந்தப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த துணைவியார்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சென்றிருந்த ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மட்டுமே தனியாக இருந்தார்கள். (ஃபத்ஹுல் பாரி, மொழியாக்கம், (ஃபைஸுல் பாரீ) பாகம் 19, பக்கம் 193, கிதாபுத் தஃப்ஸீர், பதிப்பு அஸ்ஹாபுல் ஹதீஸ் லாஹூர்)

இந்தப் போரில் முஸ்லிம்களின் முழக்கம் என்னவாக இருந்தது? பனூ முஸ்தலிக் போர் நாளன்று .

يَا مَنْصُوْرُ اَمِتْ اَمِتْ

என்பது முஸ்லிம்களின் முழக்கமாக இருந்தது என்று இப்னி ஹிஷாம் எழுதியுள்ளார்கள்.

இதன் பொருள் இவ்வாறாகும்; உதவி பெற்ற நபரே! கொன்று விடு! கொன்று விடு!

இந்த முழக்கத்தை பயன்படுத்தியதில் இருந்த நுட்பம் இதுவாக இருந்தது. அதாவது, முஸ்லிம்கள் மற்றும் நிராகரிப்பாளர்களுக்கிடையில் சந்தேகம் இருத்தல் கூடாது ; மேலும் இரவின் இருளிலும் முஸ்லிம்கள் ஒருவர் மற்றவரை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்பதாக இருந்தது. ( ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 4, பக்கம் 358, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1993)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம்) பெருமக்களின் வரிசைகளை ஒழுங்குபடுத்தினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிர்களின் கொடியை அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். மற்றொரு கூற்றில், முஹாஜிர்களின் கொடி அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்களிடம் கொடுக்கப்பட்டது என்றும் வருகின்றது. மேலும் அன்ஸார் ஸஹாபிகளின் கொடி ஹஸ்ரத் ஸஅது பின் உபாதா (ரலி) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், மக்களே! அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்று கூறுங்கள்; மேலும் இதன் மூலமாக நீங்கள் உங்களின் உயிர்களையும், செல்வங்களையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று பகைவர்களின் படைக்கு முன்னால் அறிவிப்பு செய்யுங்கள் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவ்வாறே அறிவிப்பு செய்தார்கள். ஆனால், இணை வைப்பாளர்கள் மறுத்து விட்டனர். சிறிது நேரம் அம்பு எய்வது நடந்து கொண்டிருந்தது.

இணை வைப்பாளர்களின் புறமிருந்து முதன் முதலாக ஒருவன் அம்பை எறிந்தான். மேலும் முஸ்லிம்களும் சிறிது நேரம் அம்பு எய்து கொண்டிருந்தனர். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்குத் தாக்குதல் நடத்துமாறு கட்டளையிட்டார்கள். அவர்கள் ஒன்றுபட்டவாறு தாக்குதல் நடத்தினர். இணை வைப்பாளர்களில் எவராலும் வெருண்டோடி விட முடியவில்லை. அவர்களில் பத்து பேர் கொல்லப்பட்டனர். மீதி அனைவரும் சிறைபிடிக்கப்பட்டு விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் ஆண்கள், பெண்கள், கால்நடைகள் ஆகியவற்றை சிறைபிடித்து விட்டார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 4, பக்கம் 345, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993-ம் ஆண்டு)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முரைஸீஃ என்ற இடத்தை அடைந்தபோது, அன்னார் (ஸல்) கூடாரம் அமைப்பதற்கு கட்டளையிட்டார்கள். படைகளை வரிசைப்படுத்தி கொடிகளை விநியோகம் செய்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பனூ முஸ்தலிக் மக்களிடம், இப்போதும் அவர்கள் இஸ்லாத்திற்குப் பகைமை பாராட்டுவதிலிருந்து விலகி விட்டால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சியை ஏற்றுக் கொண்டு விட்டால், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும்; முஸ்லிம்கள் திரும்பிச் சென்று விடுவார்கள் என்று அறிவிப்பு செய்தார்கள். ஆனால், அவர்கள் கடுமையாக மறுத்து விட்டனர். மேலும் போருக்காக ஆயத்தமாகி விட்டனர். எதுவரையென்றால், அந்தப் போரில் எறியப்பட்ட முதல் அம்பை அவர்களில் இருந்த ஒருவரே எறிந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் இந்த நிலையைப் பார்த்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஸஹாபிகளுக்குப் போரிடுமாறு கட்டளையிட்டார்கள். சிறிது நேரம் இரு பிரிவினருக்குமிடையே அம்பு எய்தல் நடைபெற்றது. அதற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு உடனே தாக்குதல் தொடுக்க கட்டளையிட்டார்கள். மேலும் அவ்வாறு திடீரென நிகழ்த்திய தாக்குதலால் நிராகரிப்பாளர்கள் நிலைகுலைந்து போனார்கள். ஆனால் முஸ்லிம்கள் அந்த முழு சமுதாயமும் கைப்பற்றப்பட்டு சரணடையும் கட்டாயத்துக்குள்ளாகும் அளவுக்கு மிகவும் சாதுரியமாக அவர்களைச் சுற்றி வளைத்து விட்டனர். ஓர் அபாயமான நிலையை அடைந்து விட்ட இந்தப் போர் பத்து காஃபிர்கள் மற்றும் ஒரு முஸ்லிம் கொலையுண்டதுடன் முடிவுக்கு வந்து விட்டது.ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 558-559)

இன்று நான் ஒரு ஷஹீது மற்றும் சில மர்ஹூம்களைப் பற்றியும் எடுத்துரைப்பேன். எனவே நான் அசல் குத்பாவை சுருக்கமாகவே கொடுத்துள்ளேன். எனினும் நாம் கடந்து கொண்டிருக்கின்ற முஹர்ரம் (மாதம்) தொடர்பாக துஆவின் பக்கமும் கவனமூட்ட விரும்புகின்றேன்.

இது ஒரு வேதனை மிகுந்த சம்பவமாகும். அதில் அநீதி மற்றும் அக்கிரமத்திற்கான உச்சபட்ச முன்மாதிரி நிலைநாட்டப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகள் வழிப்

பேரர்மார்களும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த நபர்களும் ஷஹீதாக்கப்பட்டனர். ஆயினும், முஸ்லிம்களின் பேறிழந்த நிலை என்னவென்றால், இதிலிருந்து படிப்பினை பெறுவதற்கு பகரமாக அந்த அநீதி தற்போது வரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. முஹர்ரம் மாதத்தில் ஷிஆக்கள் மற்றும் சன்னிப் பிரிவினரின் குழப்பம் அல்லது தீவிரவாத தாக்குதல்களின் சம்பவங்கள் அதிகரித்து விடுகின்றன. இதில் இரு தரப்பிலும் உயிர்கள் பலியாகி வருகின்றன. இன்னும் கூறப்போனால், இந்த பிரிவினைவாதம் மற்றும் சுயநலத்தை அடைவதற்கான ஆசையானது முஸ்லிம் உலகத்தில் குழப்பம் மற்றும் சீர்கேட்டிற்கான சூழலை உருவாக்கி வைத்துள்ளது. இன்னும் கூறப்போனால் ஆண்டு முழுவதுமே ஆலிம்கள் புறமிருந்தும் பல்வேறு பிரிவுகளின் சார்பாகவும் மற்றும் அரசாங்கங்களின் தரப்பிலிருந்தும் ஒருவர் மற்றவருக்கு எதிராக அநீதி மற்றும் அக்கிரமங்களுக்கான நிகழ்வுகள் வெளிப்பட்டு வருகின்றன. கொஞ்சமாவது படிப்பினை பெற வேண்டும்; கொஞ்சமாவது இறைவனுக்கு அஞ்ச வேண்டும் என்ற எந்த அறிவும் அவர்களுக்கு வருவதில்லை.

இந்த குழப்பத்திற்கு முடிவு கட்டுவதற்காக அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப ஒரு ஏற்பாடு செய்திருக்கின்றான். அதை ஒப்புக் கொள்வதற்கு இந்த மக்கள் தயாராக இல்லை. இந்த மக்கள் புரிந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். எவ்வாறாயினும், இந்த நாட்களில் அஹ்மதிகள் ஸலவாத் ஓதுவதன் பக்கமும், முஸ்லிம்களின் ஒற்றுமைக்காகவும் சிறப்பான துஆக்கள் செய்வதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். நமது நிலைமைகளையும் சிறந்தவையாக்குவதற்காகவும், அல்லாஹ்வுடன் தொடர்பை அதிகமாக்குவதன் பக்கமும் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் அனைவருக்கும் அதற்கான நற்பேறை வழங்குவானாக.

சில ஷஹீதுகள் மற்றும் மர்ஹூம்களைப் பற்றி குறிப்பிடுவேன் என்று நான் முன்னர் கூறியது போன்று ஒரு ஷஹீது இருக்கின்றார்.

அவர் ஷஹீது ஆவார். அவருடைய பெயர் போன்ஜா மஹ்மூத் ஸாஹிப் ஆகும். அவர் தாமன்ஜவாரே, டோகோ ஜமாஅத்தில் வசிக்கக் கூடியவராக இருந்தார். ஜூன் 21 அன்று தீவிரவாதிகள் அவருடைய வீட்டில் நுழைந்து அவரை ஷஹீதாக்கி விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

அவருடைய வயது 64 ஆகும். அவர் தமக்குப் பின்னால் விட்டுச் சென்றவர்களில் இரண்டு மனைவிமார்களும், 14 பிள்ளைகளும் அடங்குவர்.

ஜமாஅத் முபல்லிஃக் ஸாஹிப் நவீத் நயீம் எழுதுகின்றார்கள்: டோகோவின் வடக்கு மண்டலத்தின் தலைநகரத்திற்கு அருகில் தாமான்ஜவாரே என்ற இந்த ஜமாஅத் இருக்கின்றது. இந்தப் பகுதி புர்கினாஃபாஸ்ஹூவுடன் இணையக் கூடிய எல்லைப் பகுதியில் இருக்கின்றது. போன்ஜா மஹ்மூத் ஸாஹிபிற்கு இந்த ஜமாஅத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவராக இணையக் கூடிய நற்பேறு கிடைத்துள்ளது. விவசாயம் செய்து தமது செல்வத்தை சம்பாதித்து வந்தார்கள். அங்கு ஒரு தற்காலிக இருப்பிடத்தை உருவாக்கி இருந்தார்கள். அங்கு மழைக்காலத்தில் மனைவி மக்களுடன் இடம்பெயர்ந்து சென்று விடுவார்கள்.

கோடைகாலத்தில் தொலைவில் இருக்கும் (தமது சொந்த) கிராமத்திற்கு வந்து விடுவார்கள். பின்னர் மழைக்காலத்தில் அங்கு சென்று விடுவார்கள். இன்றைய நாட்களில் அதாவது ஜூன் 21-ம் தேதி இரவு 8 மணிக்கு தீவிரவாதிகள் அவருடைய வீட்டில் நுழைந்தபோது அவர் தமது விவசாய நிலத்திற்கு அருகில் இருக்கும் வீட்டில் தான் இருந்தார். தீவிரவாதிகள் டார்ச் அடித்துப் பார்த்தனர். அன்னாரின் மகன் அவருக்கு 14 வயதுதான் இருந்தது. வீட்டில் வெளிச்சத்தைக் கண்டதும் அவர் உடனடியாக அங்கு வந்தார்; மேலும், தமது தந்தையை தீவிரவாதிகள் சுற்றிவளைத்திருப்பதைக் கண்டார். அதைக் கண்டு அச்சமடைந்து அவர் அங்கிருந்து ஓடிவிட்டார்.

எவ்வாறிருப்பினும், தீவிரவாதிகள் அதன் பிறகு மர்ஹூமுடைய கன்னத்தின் கீழ் பக்கம் துப்பாக்கியை வைத்தனர். மேலும், சுட்டு விட்டனர். மேலும் குண்டானது மூக்கை கிழித்துக் கொண்டு வெளியேறி விட்டது. நிகழ்விடத்திலேயே அவர் அல்லாஹ்வின் அன்பிற்குரியவராகி விட்டார். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

தீவிரவாதிகள் இந்த நடவடிக்கைக்குப் பிறகு அங்கிருந்து கிளம்பிவிட்டனர். மேலும் வீட்டின் வேறு எந்த நபருக்கும் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அவரை ஷஹீதாக்க வேண்டும் என்பது மட்டுமே அவர்களின் நோக்கமாக இருந்ததாக தெரிய வருகின்றது; அதற்காகவே அவர்கள் வந்திருந்தனர். சம்பவம் தொடர்பாக தகவல் கிடைத்த உடன் அங்குள்ள இராணுவமும் வந்து விட்டது. இன்றைய நாட்களில் அரசாங்கத்திற்கோ மிகவும் குறுகிய அதிகாரங்களே இருக்கின்றன. தீவிரவாதிகள் எல்லா இடத்தையும் கைப்பற்றி வைத்துள்ளனர். மய்யத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டது. மேலும் அக்கம்பக்கத்தில் ஆய்வு செய்த பிறகு தமது வழக்கமான நடவடிக்கைக்குப் பிறகு அடுத்த நாள் மய்யத்தை அவர்களின் வாரிசுதாரர்களிடம் ஒப்படைத்து விட்டது.

மாமா பீலூ ஸாஹிப் என்பவர் அந்தப் பகுதியின் உள்ளூர் மிஷினரி ஆவார். அவர் கூறுகின்றார்: மர்ஹூம் ஆரம்ப காலத்தில் பைஅத் செய்தவர்களில் அடங்குவார். மிகவும் தொடக்கத்தில் அவர் பைஅத் செய்திருந்தார். பைஅத் செய்த பிறகு அவர் தொழுகைகளிலும், ஜமாஅத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தொடர்ந்து கலந்து கொண்டு வந்தார். இதேபோன்று முறையாக சந்தாவையும் செலுத்த துவங்கி விட்டார்.

அவருடைய ஹல்காவின் மிஷனரி ஜூதாமா தாஹிர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: அன்னார் 2007-ம் ஆண்டு பைஅத் செய்திருந்தார்கள். அதன் பிறகு உடனடியாக ரமலான் துவங்கிவிட்டது. அப்போது மழைக்காலமாக இருந்தது. விவசாயத்திற்காக வயலில் ஏற்பாடுகள் துவங்கி விட்டிருந்தன. தற்போது நீ முஸ்லிம் ஆகிவிட்டாய்; நோன்பு நோற்பாயா? அல்லது வயலில் வேலை செய்வாயா? ஏனனில், நோன்பு நோற்றுக் கொண்டு இவ்வளவு கடினமான உழைப்பை மேற்கொள்ள முடியாது. அதேநேரம் நாங்களோ கடினமாகவும் உழைப்போம்; மேலும் எங்களது விளைச்சல் சிறந்ததாக ஆகிவிடும் என்று அவரது கிராமத்தைச் சேர்ந்த சில மக்கள் கேலி செய்தனர். அதற்கு அன்னார் இவ்வாறு பதில் அளித்தார்கள். அதாவது, இஸ்லாத்தை நான் உள்ளத்தால் ஒப்புக் கொண்டுள்ளேன்; எனவே நிச்சயமாக நான் நோன்பு நோற்பேன். விளைச்சலைப் பொருத்தவரை அதற்கு அல்லாஹ்வே எஜமானன் ஆவான். என்னால் எவ்வளவு பணி செய்ய முடியுமோ அவ்வளவு செய்வேன். எனக்கு இறைவன் என்ன விதித்திருப்பானோ அது எனக்கு கிடைக்கும். அந்த இறைவன் கண்டிப்பாக கொடுப்பான்.

அல்லாஹ் அவருடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்றால், தொடர் மழையோ அந்நாட்களில் நின்று விட்டது. மேலும் ரமலான் முழுவதும் மழை பொழியவில்லை. அன்னார் மிக எளிதாக நோன்பும் நோற்றார்கள்; மேலும் பெருநாளுக்கு இரண்டாவது நாள் மீண்டும் மழை பொழிய துவங்கிவிட்டது. பின்னர் அனைத்து மக்களும் மீண்டும் வெளியேறினர். அப்போது அன்னாரும் தமது வயல்களை நோக்கி சென்றார்கள். கேலி செய்து கொண்டிருந்த மக்களையும் இறைவன் பணியிலிருந்து தடுத்து நிறுத்திவிட்டான். மேலும் தனது அடியாருக்கு இறை வணக்கத்திற்கான நற்பேறையும் வழங்கிவிட்டான்.

ஜமாஅத் அங்கு நிலைபெற்று நான்கு வருடங்களுக்கு பிறகு தலைமையகத்தின் புறமிருந்து மஸ்ஜித் கட்டுமானத்திற்கான திட்டம் உருவானது. இந்த பள்ளிவாசலுக்கான என்ன அவசியம் இருக்கின்றது?; நீங்கள் எங்களது மஸ்ஜிதில் தொழுது கொள்ளுங்கள் என்று அஹ்மதி அல்லாதவர்கள் அவர்கள் மீது மிகவும் அழுத்தம் கொடுத்தனர். ஆனால், அவர்கள் கூறினார்கள்: நாங்கள் எங்களுடைய பள்ளிவாசலைக் கட்டுவோம்; மேலும் இந்த மஸ்ஜித் கட்டப்பட்டப் பிறகு அன்னார் கிராமத்தில் தங்கியிருந்தபோதெல்லாம் ஐவேளை தொழுகைகளையும் பள்ளிவாசலுக்கு சென்று முறையாக தொழுது வந்தார்கள்.

அன்னாரின் மூத்த சகோதரர் யஃகூப் ஸாஹிப் கூறுகின்றார்கள்: மர்ஹூம் மிகவும் மென்மையான உள்ளம் படைத்தவராக இருந்தார். ஒருபோதும் எவருக்கும் தீங்கை நாடியதில்லை. குடும்பத்தின் ஏதாவது ஒரு

Proprietor off : 044- 2260 1886

RAZIK XEROX & TELECOM

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com

my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 15- 22 AUGUST 2024 Issue No.33 & 34

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

விவகாரம் தங்களால் தீர்க்க முடியாமல் ஆகும்போது அவரிடம் அந்த விவகாரம் கொண்டு செல்லப்படும். மேலும் மர்ஹூம் மிகவும் எளிதாக அதனை தீர்த்து வைத்துவிடுவார்கள்.

அல்லாஹ் மர்ஹூமுடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அவருடைய பிள்ளைகள் மற்றும் சந்ததியினருக்கும் அன்னாருடைய நன்மைகளை தொடர்வதற்கான நற்பேறை வழங்குவானாக! மேலும் அந்தப் பகுதியில் அல்லாஹ் தீவிரவாதத்தையும் முடிவுகட்டுவானாக! மேலும் அமைதி மற்றும் பாதுகாப்பான சூழலை நிலைநாட்டுவானாக!

இங்கு நிலைமையைப் பொருத்தவரை, மக்கள் தங்களுக்குள் மோதிக் கொள்கின்றனர் அல்லது முஸ்லிம் பிரிவினர்கள் குழப்பத்தை உருவாக்கியுள்ளனர் என்று கூறுவதற்கு கூறிவிடலாம். ஆனால், இந்த அனைத்து நிகழ்வுகளின் பின்புலத்திலும் வல்லரசுகள் இருந்து கொண்டு அடைக்கலம் கொடுத்து வருகின்றனர். அந்த வல்லரசுகள் தங்களது சுயநலனிற்காக இந்த நாடுகளில் தீவிரவாதத்தை வளர்த்து வருகின்றன. பின்னர் அத்துடன் சுயமே அமைதியை நிலைநாட்டுவதாக அறிக்கை கொடுத்து அனுதாபத்தை வெளிப்படுத்த முயற்சி செய்கின்றன. இந்த மக்கள் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லையென்றால், பின்னர் இந்த இயக்கங்கள் இயங்கவே முடியாது. நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம்? என்று முஸ்லிம்களுக்கும் அறிவு வருவதில்லை. சில முஸ்லிம் அமைப்புகள் இருக்கின்றன ; சில அரசியல் வாதிகள் இருக்கின்றனர்; அவர்கள் இந்த தீவிரவாதிகளுடன் இணைந்து விட்டனர்.

அடுத்த நற்குறிப்பு என்பது நூர் ஹஸீன் ஸாஹிப் அவர்களின் மகனும், நாஸிர் உமூரே ஆமாவின் உதவியாளருமாகிய மதிப்பிற்குரிய ரஷீத் ஸாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் 87-ம் வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

இவர்கள் காதியானில் பிறந்தார்கள். பிறப்பால் அஹ்மதியாக இருந்தார்கள். அவருடைய குடும்பத்தில் அன்னாருடைய தந்தையார் நூர் ஹஸீன் ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் 1924-ம் ஆண்டு இரண்டாவது கிலாஃபத் காலகட்டத்தில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைவதற்கு நற்பேறு பெற்றிருந்தார்கள். ரஷீத் ஸாஹிப் காதியானில் துவக்கக் கல்வியைப் பயின்றார்கள். பாகிஸ்தான் உருவான பிறகு மெட்ரிக் பயின்ற பிறகு ஜமாஅத்திற்கு தொண்டாற்ற துவங்கி விட்டார்கள். 1998-ம் ஆண்டு அன்னார் பணி ஓய்வு பெற்றுவிட்டார்கள் என்ற போதிலும், மீண்டும் பணி அமர்த்தப்பட்டார்கள். மேலும் 2021-ம் ஆண்டு வரை உடல்நலம் அனுமதித்த வரை அன்னாருக்கு தொண்டாற்றுவதற்கான நற்பேறு கிடைத்தது. மர்ஹூம் ஒட்டுமொத்தமாக சுமார் 65 ஆண்டுகள் ஜமாஅத்திற்கு தொண்டுகள் ஆற்றியுள்ளார்கள்.

எண்ணற்ற சிறப்பம்சங்களை கொண்டவராக இருந்தார்கள். அன்றாடப் பணிகளை அன்றாடம் செய்யக் கூடிய பழக்கம் கொண்டவராக இருந்தார்கள். ஜமாஅத்தின் மிகவும் நன்றியுணர்வு கொண்ட மற்றும் பொறுப்புணர்வு கொண்டவராக இருந்தது மட்டுமின்றி ஜமாஅத்தின் அனைத்து விவகாரங்களிலும் இரகசியங்களைப் பேணியவாறு தொண்டாற்றி வந்தார்கள். நேரத்தை பேணுவது அன்னாரின் சிறப்பம்சமாக இருந்தது. வஸிய்யத் அமைப்பில் அன்னார் இணைந்தார்கள். மேலும், சந்தாக்களை செலுத்துவதில் அன்னாருக்கு மிகவும் அக்கறை இருந்து வந்தது. முதல் நேரத்திலேயே சந்தாக்களை செலுத்தி வந்தார்கள். ஜமாஅத்தின் ஒவ்வொரு திட்டங்களிலும் பங்கெடுக்கக்கூடியவராக இருந்தார்கள். உறவினர்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்கள். தேவையுடையவர்களுக்கு மிகவும் மௌனமாக உதவி செய்வார்கள்; கிலாஃபத்தின் மீது அன்னாருக்கு சிறப்பான நேசமும், தொடர்பும் இருந்தது. இரண்டாவது கிலாஃபத் காலத்திலிருந்து ஐந்தாவது கிலாஃபத் வரை எல்லா காலகட்டங்களிலும் அன்னார் பல்வேறு தொண்டுகளை ஆற்றுவதற்கு நற்பேறு பெற்றார்கள். மேலும் மிகவும் நன்றியுணர்வுடன் தொண்டாற்றினார்கள். மிகவும் அமைதியாக பணி செய்யக் கூடியவராகவும், மிகவும் தன்னலமற்றவராக தொண்டாற்றக் கூடியவராகவும் அன்னார் இருந்தார்கள்.

1974 மற்றும் 1984 வரையிலான சோதனை நிறைந்த காலகட்டத்தில் முழுமையான முறையில் எதிர்ப்புகளை எதிர்கொள்வதற்கும் அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது. 1974-ல் எதிர்ப்பு நிறைந்த சூழலில் போலீஸ் அன்னாரை கைது செய்து விட்டது. மேலும், கைது செய்து வாகனத்தில் அவரை போலீஸ் ஃபைஸலாபாத்திற்கு கொண்டு சென்று கொண்டிருந்தது.சினீயூட் என்ற இடத்தில் எதிரிகளின் ஒரு கூட்டத்தினர் அந்த பேருந்தின் மீது தாக்குதல் நடத்தினர். அந்தப் பேருந்தில்தான் அன்னாரை போலீஸ் அழைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தது. போலீஸ் மற்றும் பேருந்தில் இருந்த ஏனைய பயணிகள் ஓடிவிட்டனர். காவலர்களும் அன்னாரை விட்டு விட்டு ஓடி விட்டனர். காவல்துறையினர் அன்னாருக்கு கைவிலங்கு போட்டிருந்தனர். ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் கைவிலங்கு போடப்பட்டிருந்த நிலையில் அன்னாரை கத்திகளால் தாக்கி கடுமையாக காயமடையச் செய்துவிட்டனர். பின்னர் அற்புதமான முறையில் அன்னார் உயிர் பிழைத்து விட்டார்கள். பல மாதங்கள் மருத்துவமனையில் இருந்தார்கள். அதன் பிறகு மீண்டும் சிறைச்சாலைக்கு அன்னார் மாற்றப்பட்டு விட்டார்கள். இதன் காரணமாக அன்னாரின் கைவிரல்களும் துண்டாகிவிட்டிருந்தன. அன்னாரின் முகத்திலும் காயங்கள் இருந்தன. மேலும் நீண்ட காலம் வரை பேசுவதும் கூட அன்னாருக்கு கடினமானதாக இருந்தது. ஆனால் எவ்வாறு இருப்பினும், அல்லாஹ் அன்னாரின் உயிரைக் காப்பாற்றினான்.

1979ம் ஆண்டு செப்டம்பரில் ரப்வாவில் அடிப்படையற்ற குற்றச்சாட்டின் கீழ் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்கு எதிராகவும் மற்றும் ஏனைய பொறுப்பாளர்களுக்கு எதிராகவும் வழக்குப் பதியப்பட்டது. அதில் ரஷீத் ஸாஹிப் அவர்களின் பெயரும் இருந்தது. மேலும் ஒரு நீண்ட காலமாக வழக்கு நடத்தப்பட்டு வந்தது. ரஷீத் ஸாஹிபிற்கு எதிராகவும் மேலும் மூன்று ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு எதிராகவும் 1987-ம் ஆண்டு ரப்வாவில் மற்றொரு வழக்கு ரப்வா காவல் நிலையத்தில் பதியப்பட்டது. மேலும் பல ஆண்டுகள் வரை அன்னாருக்கு நீதிமன்றங்களுக்கு சென்று வர நேரிட்டது.

அன்னாரின் மகள் அமத்துஸ் ஸபூர் ஸாஹிபா கூறுகின்றார்கள்: ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதை பேணி வந்தார்கள். மேலும் அடியார்களுக்குரிய உரிமைகளை கருத்தில் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். மற்றவர்களின் துன்பங்களை தனது துன்பமாக கருதக் கூடியவர்களாக இருந்தார்கள். மேலும், பலமுறை அன்னார் இவ்வாறு நடந்து கொண்டுள்ளார்கள். அதாவது விவகாரத்தை முடிப்பதற்காகவே தனது உரிமையை கூட விட்டு கொடுத்துள்ளார்கள்.

இதன் தொடர்ச்சி 7 ம் பக்கம்....

**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad